


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 231 03.04.2026 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 231 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(03-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-20
பிறை: தேய்பிறை
திதி
பிரதமை காலை 8.57 வரை
பிறகு துவிதியை.
நட்சத்திரம்:
சித்திரை இரவு 7.25 வரை
பிறகு சுவாதி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
கால் 10.30-12.00 மணி
எமகண்டம்
காலை 3.00-4.30 மணி.
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | உறுதி |
| ரிஷபம் | பெறுமை |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | உயர்வு |
| சிம்மம் | தெளிவு |
| கன்னி | சுபம் |
| துலாம் | அடக்கம் |
| விருச்சிகம் | அமைதி |
| தனுசு | பரிசு |
| மகரம் | கவனம் |
| கும்பம் | கடமை |
| மீனம் | ஒழுக்கம் |

# பாதுகாப்புக் கவுன்சில் அவசர கூட்டம்: பிரதமர் ஆலோசனை

## ஈரான் போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க நடவடிக்கை

புதுடெல்லி, ஏப்.3:

ஈரான் - அமெரிக்க, இஸ்ரேல் போரால் மேற்காசியாவில் பதற்றம் தொடரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று இரவு பாதுகாப்புக்கான அமைச்சரவை கவுன்சில் (சிசிஎஸ்) ஆலோசனை நடத்தியது. ஈரான் போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுக்கு எதிராக கடந்த பிப்ரவரி 28-ம் தேதி போரைத் தொடங்கின. இந்தப் போரில் ஈரான் நாட்டின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைவர்கள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, ஈரான் கடும் பதிலடியை கொடுக்கத் தொடங்கியது. வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் கடும் தாக்குதலை நடத்தியது. கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளைக் குறிவைத்து ஈரான் தாக்குதல்களை நடத்துவதால் கச்சா எண்ணெய்யை மற்ற நாடுகளுக்கு அனுப்புவதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மேலும், எண்ணெய் கப்பல்கள் செல்லும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முற்றிலும் முடக்கியுள்ளது. இதனால், சர்வதேச அளவில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.



இந்நிலையில், பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று இரவு 7 மணிக்கு டெல்லியில் நடைபெற்றது.

டெல்லியில் பிரதமரின் அதிகாரப்பூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், பொருளாதாரம் மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளைக் கையாளும் பல மூத்த அமைச்சர்களும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேற்காசியாவில் தொடரும் போர், அதனால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், நாடு சந்தித்து வரும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் உள்ளிட்டவை குறித்து இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களுடன் பிரதமர் மோடி விரிவான ஆலோசனை நடத்தினார்.

மேலும், ஈரான் போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக ஆலோசனை நடத்தப்பட்டது. குறிப்பாக நாட்டில் எரிபொருள் மற்றும் எல்பிஜி, பிஎன்ஜி விநியோகத்தின் தொடர்ச்சியை மதிப்பிட வேண்டும் என்றும், உணவு மற்றும் உரங்களில் பதுக்கல் மற்றும் செயற்கையான விலை உயர்வுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியர்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றி இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

இதே பிரச்சினை தொடர்பாக, இதற்கு முன்பு பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் கடந்த மார்ச் 22-ம் தேதி கூடி ஆலோசனை நடத்தியது. இதில், மேற்காசிய போரால் ஏற்பட்டுள்ள உலகளாவிய சூழல் குறித்தும், இந்திய அரசின் தொடர்புடைய அமைச்சகங்கள் மற்றும் துறைகள் இதுவரை எடுத்துள்ள தணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சரவைச் செயலாளர் விரிவாக விளக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரவு 7 மணிக்கு தொடங்கிய கூட்டம் 9.15 மணிக்கு நிறைவடைந்தது. மத்திய பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கவுன்சில் கூட்டத்தில் நடந்த ஆலோசனை தொடர்பாக செய்தியாளர்களுக்கு மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் விளக்கினார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

மேற்காசியாவில் நடந்து வரும் போரின் காரணமாக பல்வேறு தாக்கங்கள் நிகழ்ந்து வருகின்றன. இதை இந்தியா ராஜதந்திர ரீதியாக அணுகி வருகிறது. இந்த விவகாரத்தில் ராஜதந்திர ரீதியாக நாங்கள் பரந்த சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறோம்.

மேற்காசிய போர் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி, நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டனைத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, இரு நாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து 2 நாட்டு தலைவர்களும் நீண்ட ஆலோசனையை நடத்தினர்.

அதே நேரத்தில், மேற்கு ஆசியாவின் நிலைமை குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்,

மேலும் அப்பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவில் மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் 2 நாட்டுத் தலைவர்களும் வலியுறுத்தினர்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், போர்ச்சுகல் நாட்டின் வெளியுறவு அமைச்சர் பாலோ ரங்கலுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினார். அப்போது, மேற்காசியாவில் நடந்து வரும் மோதல் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்தியர்கள் பாதுகாப்பு: இதுவரை, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள நமது தூதரகம் 1,171 இந்தியர்களை தொடர்பு கொண்டு அவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புதவற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதில், 818 இந்திய மாணவர்கள் தரைவழி எல்லை வழியாக ஈரானை விட்டு ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் வழியாக வெளியேறுவதும் அடங்கும். இவ்வாறு வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

# சேப்பாக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் வேட்புமனு தாக்கல்!

சென்னை, ஏப்.3:

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப். 23 ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலுக்கான பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஆளும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில், காங்கிரஸ், விசிக, மதிமுக, தேமுதிக, மக்கள் நீதி மய்யம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யூனிஸ்ட், கொங்கு மக்கள் தேசியக் கட்சி, முக்குலத்தோர் புலிப்படை, மஜக, கொங்கு இளைஞர் பேரவை உள்பட 23 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அதேபோல, அதிமுக கூட்டணியில் பாஜக, தமாகா, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 167 இடங்களில் அதிமுகவும் 164 இடங்களில் திமுகவும் போட்டியிடுகின்றன.

இந்த நிலையில், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் திமுக சார்பில் இரண்டாவது முறையாகப் போட்டியிடும் துணை முதல்வரும், விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இன்று (ஏப்.2) காலை திருவல்லிக்கேணியில் தேர்தல் நடத்தும் அலுவலர் சுகந்தியிடம் வேட்புமனு



தாக்கல் செய்தார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் தொகுதியான சென்னை சேப்பாக்கம் தொகுதியில், கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத்தேர்தலில் முதல்முறையாகப் போட்டியிட்ட அவரது பேரன் உதயநிதி ஸ்டாலின், 93,285 வாக்குகள் (68.9 சதவிகிதம்) பெற்று தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாமகவின் வேட்பாளர் கசாலியை சுமார் 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்திருந்தார்.

முதல் தேர்தலிலேயே வெற்றிபெற்ற உதயநிதி ஸ்டாலின், அதன் பின்னர் அமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டு துணை முதல்வரானார். தற்போது சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் இரண்டாவது முறையாகப் போட்டியிடும் உதயநிதிக்கு எதிராக அதிமுக சார்பில் ராஜாராம், நாம் தமிழர் கட்சியின் சார்பில் ஆயிஷா பேகம், தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் டி. செல்வம் ஆகியோர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

# வெளிநாட்டு நிதி பங்களிப்பு: மசோதாவை திரும்பப்பெற மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.3:



தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

*வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டமுன்வரைவு, 2026 என்ற பெயரில் மத்திய பா.ஜ.க. அரசால் முன்மொழியப்பட்டிருக்கும் திருத்தங்கள் முழுக்க முழுக்க கிறித்தவத் தொண்டு நிறுவனங்களையும், தேவாலயங்களையும், பிற மதச் சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும், குறிவைத்துத் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.

*ஏற்கெனவே வக்பு வாரிய சட்டத்திருத்தம் மூலம் இஸ்லாமிய சொத்துகளைக் கபளீகரம் செய்ய முயன்றதையடுத்து, தற்போது மற்ற மதச்சிறுபான்மையின அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை முடக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இறங்கியுள்ளது.

* எதிர்க்கட்சிகளின் போராட்டத்தாலும், கிறித்தவர்கள் அதிக அளவில் வாழும் கேரளத்தில் தேர்தல் நடைபெற இருப்பதாலும் இப்போதைக்குப் பின்வாங்குவது போல நடித்து, விரைவில் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டி இந்த சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற பா.ஜ.க. அரசு திட்டமிடுவதாக அறிகிறேன்.

* இந்த முயற்சிகளைக் கைவிட்டு, பிரதமர் அவர்கள் இந்தத் தன்னிச்சையான, அநியாய சட்டத்திருத்தத்தை முற்றிலுமாக திரும்பப் பெறும் நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹார்முஸ் நீரிணை வழியாக 47 ஆயிரம் டன் எல்.பி.ஜி.யுடன் இந்தியா வந்தடைந்த கப்பல்




புதுடெல்லி, ஏப்.3:

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடந்து வரும் போரால் மேற்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக, இந்தியாவில் எரிசக்தி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

இந்த இக்கட்டான சூழலில், சுமார் 47 ஆயிரம் டன் எல்.பி.ஜி. எரிவாயுவை ஏற்றிக்கொண்டு 'ஜாக் வசந்த்' என்ற இந்திய கப்பல் குவைத்தில் இருந்து இந்தியா நோக்கி புறப்பட்டது. வழியில் ஈரான் ராணுவத்தின் நேரடி கண்காணிப் பில் உள்ள, ஆபத்தான ஹார்முஸ் நீரிணை வழியாக இந்த கப்பல் வரவேண்டி இருந்தது.

போர் பதற்றம் காரணமாக எந்த நேரத்திலும் தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்திலும், இந்திய மாலுமிகள் சாமர்த்தியமாக செயல்பட்டு கப்பலை குஜராத் துறைமுகத்துக்கு கொண்டு வந்தனர். அங்கு 17 ஆயிரத்து 100 டன் எல்.பி.ஜி.யை இறக்கிய பின்னர் அந்த கப்பல் மும்பை துறைமுகம் வந்து சேர்ந்தது.

அந்த கப்பலில் இருந்து எல்.பி.ஜி.யை மற்றொரு சேமிப்பு கப்பலுக்கு மாற்றும் பணி விறுவிறுப்பாக நடைபெற்றது. எங்கள் உயிருக்கே ஆபத்தான சூழல் இருந்தாலும், நாட்டுக்காக எரிவாயுவை கொண்டு வந்ததில் பெருமைப்படுகிறோம் என அதில் பணியாற்றிய மாலுமிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# ஏப்.23-ம் தேதி தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் பொது விடுமுறை அளிக்க உத்தரவு

சென்னை, ஏப்.3:

தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளதால், அன்றைய தினம் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கேரளம் மற்றும் புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி அன்றும், தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதியும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி, தேர்தல் நடைபெறும் நாளன்று, தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து வகை தொழிலாளர்களும் (தினக்கூலி, தொகுப்பூதியம், வாரந்திர ஊதியம், ஒப்பந்த ஊதியம் மற்றும் மாத ஊதியம்) வாக்களிக்கும் வகையில் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய




பொது விடுமுறை வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, கேரளம் மற்றும் புதுச்சேரியில் நடைபெறும் தேர்தல்களுக்கு ஏப்ரல் 9-ம் தேதி அன்று அவ்வூரைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி அன்று நடைபெறும் தேர்தலுக்கு அனைத்து தொழிற்சாலை நிறுவனங்களும் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் தேர்தல் நாளன்று வாக்களிப்பது அவசியம் என்பதையும் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தேர்தல் நாளில் தொழிலாளர்களுக்கு பொது விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள் பற்றிய தகவல்களை மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசியில் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# செல்லூர் சுயம்பு வாழ வந்த அம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை வழிபாடு







பரமக்குடி, ஏப் 03: ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள செல்லூர் கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுயம்பு வாழ வந்த அம்மன் கோவில் உள்ளது. இங்கு ஆடி உற்சவம் மற்றும் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும். பங்குனி உத்திரம் நாளை முன்னிட்டு செல்லூர் கிராம மக்கள் சார்பில் உலக நன்மைக்காக சிறப்பு திருவிளக்கு பூஜை வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். முன்னதாக வாழ வந்த அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது.

# இன்னமுத வெள்ளமாகிய இந்தளூர் அந்தணன்



ஸ்ரீ பரிமல ரங்கநாத சுவாமி தேவஸ்தானம் திரு இந்தளூர் திவ்யதேசம் பங்குனி பிரமோத்ஸவம் 2026 நாள் 09 – காலை – ரத்தரோஹணம்

## முதல்வர் ஸ்டாலினை விட பல மடங்கு சொத்து! வில்லிவாக்கம் வேட்பாளர் ஆதவ் அர்ஜுனா!

சென்னை, ஏப்.03: தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், தனக்கு ரூ.6.25 கோடி மதிப்புள்ள சொத்துகள் இருப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தவெக தேர்தல் பிரசார – மேலாண்மைபொதுச்செயலரும் வில்லிவாக்கம் வேட்பாளருமான ஆதவ் அர்ஜுனாவுக்கு ரூ.197 கோடி மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



நடிகராக இருந்து அரசியல்வாதியாக மாறியிருக்கும் தவெக தலைவர் விஜய், ஏற்கனவே பெரம்பூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில் தற்போது திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்டவை களம்கண்டுள்ளன.

தவெக சார்பில் சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடும் தவெகவின் தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுசெயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா திங்கள்கிழமை வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

அவர் தாக்கல் செய்த வேட்பு மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த பிரமாணப் பத்திரத்தில், தனக்கு ரூ.197.52 கோடி மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதில், அசையும் சொத்துகள் ரூ.180.03 கோடி என்றும் ரூ.162.14 கோடி மதிப்பிலான சொத்துகள் தன்னுடைய மனைவி டெய்ஸி அர்ஜுனா பெயரில் இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 – 25ஆம் ஆண்டில் இவர் ரூ.11.10 கோடி வருவாய் ஈட்டியதாகவும் மனைவி ரூ.6.85 கோடி வருவாய் ஈட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தான் தொழிலதிபர் என்றும், அவருக்கு சொந்தமாக ரூ.2.29 கோடி மதிப்புள்ள 1,691 கிராம் தங்க நகைகள் இருப்பதாகவும், மனைவிக்கு ரூ.3.01 கோடி மதிப்புள்ள 2,225.62 கிராம் தங்க நகைகள், ரூ.6.16 கோடி மதிப்பிலான வைர நகைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிறுவனங்களிலும் ஆதவ் அர்ஜுனா ரூ.2.23 கோடி ரூபாயை முதலீடு செய்திருப்பதாகவும், இவருக்கு சொந்தமாக நான்கு வாகனங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மானாமதுரை தொகுதியில் பிரசாரத்தை தொடங்கிய கனிமொழி திமுக தொண்டர்கள் திரண்டனர்





மானாமதுரை, ஏப் 03: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி திருப்புவனம், மானாமதுரை பகுதியில் மானாமதுரை தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசிக்கு திமுக நாடாளுமன்ற மன்ற குழுதலைவர்கனிமொழிஎம்பி வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வரும் தேர்தலில் வெற்றி இப்போதே தெரிந்து விட்டது. கீழடி அகழ்வாராய்ச்சி மூலம் தமிழகத்தை உலகறிய செய்தவர் அண்ணன் தளபதி அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு அனைத்து திட்டங்களை கிடைக்க செய்துள்ளோம்.

உங்கள் தொகுதி நமது வேட்பாளர் தமிழரசி கடந்த ஐந்து ஆண்டுகளில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி தந்து உள்ளார். உங்களில் ஒருவராக சட்ட மன்றத்தில் பேசி வருகிறார்.

மக்களுக்கு தெரிவித்தபடி மானாமதுரையில் அரசு கலைக்கல்லூரி, தொழிற் பயிற்சி நிலையம், இளையான்குடி பகுதியில் வேளாண் விரிவாக்க மையம், நவீன பஸ் நிலையம், சாலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், மானாமதுரை திருப்புவனம் பகுதியில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டிடங்கள், கூடுதல் பள்ளி கட்டிடங்கள் பயணிகள் நிழற்குடைகள் என பலதிட்டங்களை நிறைவேற்றி தந்து உள்ளார். அந்த உரிமையுடன் உங்களிடம் உதய சூரியனுக்கு வாக்கு அளித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என பேசினார்.

உடன் திமுக வேட்பாளர் தமிழரசி எம்எல்ஏ, கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன், மானாமதுரை நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி, காங்கிரஸ் மூத்த தலைவர் ஏ.ஆர்.பி. முருகேசன், காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர் சுந்தரராஜன், மாவட்ட தலைவர் சஞ்சை, நகராட்சி துணை தலைவர் பாலசுந்தரம், நகர் திமுக செயலாளர் பொன்னுசாமி, இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன், கண்ணமங்கலம் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சுப தமிழரசன் உள்பட திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சிறுமிக்கு நவீன கருவியை பொருத்தி மறுவாழ்வு: ராஜீவ்காந்தி மருத்துவமனை மருத்துவர்கள் தகவல்



சென்னை, ஏப்.03: சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவ கண்காணிப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் கூறியதாவது: கடலூரை சேர்ந்த ஏழை தம்பதியின் மகள் 14 வயது சிறுமிக்கு கடந்த 2 ஆண்டுகளாக கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறும் பாதிப்பு இருந்து வந்தது.

பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும், அந்த பிரச்சினை சரியாக வில்லை. இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு அந்த சிறுமி அழைத்து செல்லப்பட்டார்.

அங்கு சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், சிறுமிக்கு நியூரோஜெனிக் ப்ளேடர் எனப்படும் சிறுநீர்ப் பை செயலிழப்பு பாதிப்பு இருந்ததை கண்டுபிடித்தனர். நரம்பு மண்டலங்களில் ஏற்படும் சேதத்தால் இந்த பிரச்சினை ஏற்படுகிறது.

நரம்புகளை முடுக்கி விடும் நியூரோ மாடுலேஷன் தெரபி சிகிச்சை தான் இதற்கு ஒரே தீர்வு ஆகும். இதய துடிப்பை சீராக்க பேஸ் மேக்கர் பொருத்துவதை போன்று, நரம்புகளின் செயல்பாட்டை சீராக்க நியூரோ மாடுலேஷன் சாதனத்தை அறுவை சிகிச்சை மூலம் பொருத்த வேண்டும்.

இதற்கு அந்த தனியார் மருத்துவமனையில் ரூ.25 லட்சம் செலவாகும் என்று தெரிவித்துள்ளனர். ஏழ்மை நிலையில் இருக்கும் பெற்றோரிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சிறுமி அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, சிறுமியக்கு முதல்கட்ட அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மருத்துவர்கள் மேற்கொண்டனர்.

**15 ஆண்டுகள் செயல்படும்**

தொடர்ந்து, ரூ.7.5 லட்சம் மதிப்பிலான மின் முடுக்கி உபகரணம் சிறுமியின் உடலில் பொருத்தப்பட்டது. 15 ஆண்டுகள் செயல்படும் அந்த கருவி மற்றும் அதற்கான சிகிச்சை செலவை அரசு ஏற்று கொண்டது.

தற்போது சிறுமி நலமுடன் உள்ளார். மகளை காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# செம்மண் குவாரி முறைகேடு வழக்கு பொன்முடி உள்ளிட்ட 7 பேரும் விடுதலை!



விழுப்புரம், ஏப்.03: செம்மண் குவாரி முறைகேடு வழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்து விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

செம்மண் குவாரி முறைகேடு வழக்கில், போதிய சாட்சிகள் இல்லாததால் பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி, உறவினர்கள் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வதாக விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி மணிமொழி நேற்று தீர்ப்பளித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பூத்துறை கிராமத்திலுள்ள செம்மண் குவாரியில் அளவுக்கு அதிகமாக மண் எடுத்ததன் மூலம், அரசுக்கு ரூ.28.36 கோடி வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் க.பொன்முடி எம்.எல்.ஏ, அவரது மகன் பொன். கௌதமசிகாமணி, ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன், சதானந்தம், கோபிநாதன், கோதகுமார், லோகநாதன் ஆகிய 8 பேர் மீது 2012–ஆம் ஆண்டில் மாவட்டக் குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப்பதிந்தனர்.

இந்த வழக்கு விசாரணை விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணைக் காலத்தில் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட லோகநாதன் உயிரிழந்து விட்டார். எஞ்சிய 7 பேர் மீதும் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்ட 57 பேரிடம் கடந்த மார்ச் மாதம் விசாரணை முடிவடைந்தது. இதில் 30 பேர் அரசுத் தரப்புக்கு பாதகமாக சாட்சியமளித்தனர். கடந்த மாம் இந்த வழக்கின் விசாரணை விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வந்தபோது, முன்னாள் அமைச்சர் க. பொன்முடி உள்ளிட்ட 7 பேரும் நீதிபதி முன்ஆஜராகினர். அவர்களிடம் குற்றச்சாட்டுகள் குறித்தும், அரசுத் தரப்புகள் அளித்துள்ள சாட்சியங்கள் குறித்தும் முதன்மை மாவட்ட நீதிபதி ஏ. மணிமொழி தனித்தனியே கேள்வியெழுப்பியிருந்தார்.

செம்மண் குவாரியை குத்தகைக்கு எடுத்தது உண்மைதான். ஆனால், அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதலாகவும், முறைகேடாகவும் செம்மண்ணை எடுக்கவில்லை. அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக தங்கள் மீது பொய் வழக்குப் பதியப்பட்டுள்ளதாகக் கூறி, பொன்முடி உள்ளிட்ட 7 பேரும் தங்கள் தரப்பு வாதத்தை முன்வைத்தனர். இந்த பதிலை முதன்மை மாவட்ட நீதிபதி பதிவு செய்து கொண்ட நிலையில், இன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

போதிய சாட்சிகள் இல்லாததால் செம்மண் குவாரி முறைகேடு வழக்கில், பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி, உறவினர்கள் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வதாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# தாயார் ஸ்ரீ ஆண்டாள் சமேத ஸ்ரீமதன கோபாலன் திருக்கல்யாண வைபவம்



மதுரை மேல மாசி வீதி ஸ்ரீ மதன கோபால சுவாமி திருக்கோயில் ஸ்ரீருக்மணி ஸ்ரீ சத்யபாமா ஸ்ரீமதன மதுரவல்லி தாயார் ஸ்ரீ ஆண்டாள் சமேத ஸ்ரீமதன கோபாலன் திருக்கல்யாண வைபவம்.

## சேலம் செவ்வாய்பேட்டையில் வியாபாரி கொண்டு சென்ற 3.3 கிலோ வெள்ளி கொலுசு பறிமுதல்



சேலம், ஏப்.03: சேலம்செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையம் முன்பு தேர்தல் பறக்கும் படை வடக்கு தொகுதி அதிகாரி தேவகுமார் தலைமையில் வாகன சோதனையில் நேற்று இரவு ஈடுபட்டனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த சேலம் குகை மார்க்கெட் தெருவை சேர்ந்த வெள்ளி வியாபாரியான ரவி என்பவரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் 3 கிலோ 300 கிராம் எடை கொண்ட வெள்ளி கொலுசுகள் இருந்தது தெரியவந்தது. ஆனால் அதற்கு உரிய ஆவணங்கள் இல்லை என கூறி பறக்கும் படை அதிகாரிகள் அதனை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அதனை கருவூலத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

# 64 தொகுதிகளில் சசிகலா கட்சி போட்டி



சென்னை, ஏப்.03: அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கியுள்ள சசிகலா, சட்டப்பேரவைத் தேர்தலில் பாமக நிறுவனர் ராமதாஸுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறார்.

முதல்கட்டமாக 21 வேட்பாளர்கள், அடுத்து 38 வேட்பாளர்களை அறிவித்த நிலையில், நேற்று 5 பேர் கொண்ட 3-ம் பட்டியலை சசிகலா வெளியிட்டுள்ளார்.

மொத்தத்தில் சசிகலா கட்சி 64 தொகுதிகளில் போட்டியிடுகிறது. சசிகலா தரப்பில் கூட்டணி கட்சிகளுக்கு 13 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த கூட்டணியில் பாமக சார்பில் இதுவரை 25 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# ஆதவ் அர்ஜுனா கார்மோதி காவலர் காலில் எலும்பு முறிவு!



சென்னை, ஏப்.03: 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி தவெக தலைவர் விஜய் இன்று திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார். தொடர்ந்து அத்தொகுதியில் பிரச்சாரமும்மேற்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின்போது, அக்கட்சியின் தேர்தல் மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவின் கார் ஏறியதில் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலரின் கால் எலும்பு முறிந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விஜய்யின் பிரச்சார வாகனத்தைப் பின்தொடர முயன்றபோது, கார் செல்வதற்காக அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் சதீஷ் என்பவர் பேரிகார்டுகளை தள்ளிவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அப்போது கார் அவரின் கால்மீது ஏறியதாக கூறப்படுகிறது. இதில் அவரது கால் எலும்பு முறிந்து பலத்த காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நிகழ்ந்தபோது ஆதவ் அர்ஜுனா விஜய்யின் வாகனத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. விபத்தை தொடர்ந்து தவெகதொண்டர்கள் காவலரை தூக்கிக்கொண்டு சென்று ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டுள்ளனர்.

தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106

## ADVERTISE WITH US
CONTACT US
9438610756

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627

## உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
**D.சக்திவேல்**
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் முகக் குறிப்பு கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அனுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

## Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## •WANTED•
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
- ✔ Salary: ₹10,000 - ₹15,000
- ✔ Attractive Incentives
- ✔ Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935

## ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact 9790979539

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

## WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact: 8428872887

## WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## CAR WASH — SADHANA DEVI.K SUPREME Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


## WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

## அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!





பலமுறை துடித்தது
என் இமைகள்
உன்னை பார்ப்பதற்கு
மட்டுமல்ல உன்னை
என் விழிக்குள்
சேர்ப்பதற்கும்தான்

உன்
இம்சைகளும்
ரசணையே
நீயில்லா
நேரங்களில்

மெல்ல மெல்ல
சாய்கின்றது
மனம் உன்பக்கம்
உன் விழிகளென்னை
வீழ்த்த...

எண்ணற்ற கவிதைகள்
எழுதினாலும்
உனக்காக கிறுக்கும்போது
மட்டுமே மனமும்
மகிழ்ச்சியில்
துள்ளிக்குதிக்கின்றது

# வாழ்க்கை தத்துவம்...



நம் வாழ்க்கை எளிதல்ல
நாம் தான் எதிர்க்கப்
பழக வேண்டும்

தேவையானவற்றை பேசி
தேவயற்றவையை வீசி
செல் பேச்சில் கட்டுப்பாடுத்
தான் வேண்டும்

அவமானம் படும்போது
அவதாரம் எடு
வீழ்கின்ற போது
விஸ்வரூபம் எடு
வாதாடுவதை விட்டு
விட்டு வாழ்ந்துக் காட்டு

கிடைச்சத வைச்சு வாழ்ந்துட்டு
போறதுக்கு பேரு வாழ்க்கை
இல்லங்க புடிச்ச ஒன்னுக்காக
போராடி தோத்தாலும்
அதுதாங்க நீங்க வாழ்ந்த
உண்மையான வாழ்க்கை

# "அலைகள் சொல்லும் கணக்கு"

கடற்கரை கிராமம்.
காற்றில் உப்புச் சுவை.
வாழ்க்கையில் கடன்
சுமை.

"வீரய்யன்" என்ற பெயர் கேட்டாலே மீனவர்கள் நடுங்குவார்கள். அவன் கேட்டவுடன் பணம் கொடுப்பான்... ஆனால் கெஞ்சினாலும் கருணை காட்ட மாட்டான்.

"தேதி சொன்னா சொன்னதுதான்!"

சொன்ன தேதியில் காசு திருப்பி வராவிட்டால் படகை இழுத்துக் கொண்டு போய் விடுவான்... அல்லது வலையைக் கட்டி எடுத்துப் போய் விடுவான்.

முத்து, அந்தக் கிராமத்தின் சாதாரண மீனவன். வீட்டில் மனைவி, இரண்டு பிள்ளைகள்.

கடல்தான் அவனோட நம்பிக்கை... வாழ்க்கை.

அவனுக்கும் வீரய்யனைப் பற்றி நன்றாகவே தெரியும்தான் ஆனாலும் அவனுடைய சூழ்நிலை வீரய்யனிடம் கடன் வாங்க வைத்து விட்டது.

"அடுத்த வாரம் கட்டிடுறேன் அண்ணே..." என்று கையெழுத்து போட்டான்.

அடுத்த வாரம்... "இன்னும் பணம் வரலையா?" வீரய்யன் அவன் வீட்டின் முன் நின்றான்.

"இன்னும் இரண்டு நாள்... நல்ல மீன் கிடைச்சா..." முத்து கெஞ்சினான்.

"எனக்கு கடல் கதைகள் வேண்டாம்!...இன்னும் ரெண்டு நாள் டைம் தர்றேன்... அதுக்குள்ளார திருப்பிக் குடுத்துடு" கோபமாக திரும்பிப் போனான் வீரய்யன்.

அடுத்த நாள் அதிகாலையிலேயே...முத்து கடலுக்குப் போனான்.

ஆனால் மாலையில் திரும்பி வரவில்லை.

செய்தி வந்தது.

எல்லையை தாண்டியதாக நினைத்து,
அந்தப் பக்க ராணுவத்தினர் சுட்டு விட்டார்கள்.

ஊரே உறைந்தது. முத்துவின் வீடு அழுகையால் நிறைந்தது.

அவன் மனைவி தரையில் விழுந்து புரண்டாள். பிள்ளைகள் "அப்பா... அப்பா" என்று அழுதார்கள். வீரய்யன் வந்தான்.

அவன் வழக்கம் போலக் கத்தவில்லை.. மௌனமாக நின்றான்.

அவன் கண்கள் முத்துவின் வலையைப் பார்த்தன. பக்கத்தில் காலி மீன் கூடை...

பிள்ளைகளின் கண்ணீர்.

"அண்ணே... அப்பா கடனை நான் கட்டுறேன்... என் அப்பாவை திருப்பிக் குடுங்க..." சிறுவன் கதறினான்.

அங்கு கண்ட காட்சிகள் வீரய்யன் மனசைக் கிழித்தன. அவன் மெல்ல முத்துவின் வலையை எடுத்தான்.

"இதை எடுத்துப் போகத்தான் வந்தானா?" என்ற பயம்.

ஆனால் அவன் அதை வீட்டுக்குள் கொண்டு வைத்து, "இது உங்க சொத்து... எனக்கு வேண்டாம்" என்றான்.

அன்று முதல் வீரய்யன் வட்டித் தொழிலை நிறுத்தவில்லை... ஆனால் மனநிலையை மாற்றிக் கொண்டான்.

"ஒரு கஷ்டத்திற்காக தன்னிடம் வந்தவர்களின் சூழ்நிலையைப் பயன் படுத்தி வட்டிச் சுமையை அவர் மீது ஏற்றுவது பாவத்திலும் பாவம்" என்று புரிந்து கொண்டான்.



முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நோயாளி:* டாக்டர், எனக்கு ஒரு சந்தேகம். தூக்கத்துல கனவு வரும்போது ஏன் நம்மால ஓட முடியல?

*டாக்டர்:* அது ஏன்னா... நீங்க தூங்கும்போது உங்க கால்கள் லீவுல இருக்கும், அதான்!

*நண்பன் 1:* மச்சி, அந்த மரத்துல ஏறி குதிச்சா என்ன ஆகும்?

*நண்பன் 2:* என்ன ஆகும்? 'தலை' கீழா விழுவ, அவ்வளவுதான்!



# தினம் ஒரு சமையல்



## தக்காளி வதக்கல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| தக்காளி | - 5 |
| சின்ன வெங்காயம் | - 6 |
| பூண்டு பல் | - 5 |
| பச்சை மிளகாய் | - 1 |
| உப்பு | -தேவைக்கு |
| குழம்புமிளகாய்தூள் | -1 ஸ்பூன் |
| சமையல்எண்ணெய் | - 4 ஸ்பூன் |
| தண்ணீர் | - அரைகப் |
| மஞ்சள் தூள் | -கால் ஸ்பூன் |
| கடுகு | - கால்ஸ்பூன் |
| உளுந்தம்பருப்பு | - கால்ஸ்பூன் |
| சீரகம் | -கால்ஸ்பூன் |

செய்முறை:



முதலில்தக்காளி, பூண்டு,வெங்காயம், பச்சைமிளகாய் கட் பண்ணிக்கொள்ளவும்.

குழம்புப்பொடி, உப்பு எடுத்துக்கொள்ளவும்.ஒரு வாணலியை அடுப்பில் வைத்து 4 ஸ்பூன் எண்ணெய் விட்டு கடுகு தாளிக்கவும்.

பின் உளுந்தம்பருப்பு, சீரகம் தாளிக்கவும்.

பின் கட் பண்ணிய வெங்காயம், பூண்டு சேர்த்து வதக்கவும்.மஞ்சள் பொடிசேர்க்கவும்.

பின் கட் பண்ணிய தக்காளியைச்சேர்த்து நன்கு வதக்கவும். மிளகாய் பொடி,உப்பு சேர்க்கவும்.நன்கு கலந்துவிடவும்.

அரை கப் தண்ணீர் ஊற்றவும். தக்காளி கொஞ்சம் சாப்டாக வேகும்.தண்ணீர் வற்றியதும் இறக்கி கேஸை ஆப் செய்து விடவும்.இப்படிஇருந்தால் தான் சப்பாத்தியில் ரோல்பண்ண முடியும்.தயிர் சாதத்திற்கும் சாப்பிடநன்றாக இருக்கும்.

தக்காளி வதக்கல் ரெடி,

# வெண்நொச்சி பயன்கள்



வெண்நொச்சி (VITEX NEGUNDO) என்பது வலி, வீக்கம், மற்றும் காய்ச்சலைத் தணிக்கும், உடலுக்கு உற்சாகம் தரும் ஒரு சிறந்த சித்த மருத்துவ மூலிகையாகும். இதன் இலைகள் மூட்டு வலி, தசைப்பிடிப்பு, தோல் நோய்கள் மற்றும் சுவாசக் கோளாறுகளைக் குணப்படுத்தப் பயன்படுகின்றன. இதன் இலைகளின் கஷாயம் அல்லது ஆவி பிடிப்பது சிறந்த நிவாரணியாகும்.

வெண்நொச்சியின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

வலி மற்றும் வீக்க நிவாரணி: நொச்சி இலைகளை வதக்கி வீக்கம் மற்றும் கட்டிகள் மீது கட்டினால், அவை விரைவாகக் கரையும். மூட்டு வலி, தசைப்பிடிப்பு மற்றும் கீல்வாதத்திற்கு இது சிறந்த நிவாரணம் அளிக்கிறது.

காய்ச்சல் மற்றும் சளி: நொச்சி இலை குடிநீர் காய்ச்சல், குளிர் மற்றும் சளியைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

உடல் சுத்திகரிப்பு: இதன் இலைகளைச் சுடுநீரில் போட்டு குளிப்பதால் உடல் அசதி, சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். தோல் நோய்களைக் குணப்படுத்தி, உடலை நச்சுத்தன்மையிலிருந்து சுத்திகரிக்க உதவுகிறது.

சுவாசக் கோளாறுகள்: ஆஸ்துமா, நாள்பட்ட இருமல் மற்றும் தொண்டை புண் (PHARYNGITIS) ஆகியவற்றுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

பூச்சிக்கொல்லி: இதன் இலைகளைக் காயவைத்து எரிப்பதன் மூலம் கொசுக்களை விரட்டலாம்.

பெண்களுக்கான மருத்துவம்: பிரசவித்த தாயைத் தேற்றவும், அடிவயிற்று வலி மற்றும் வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சனைகளுக்குச் சிகிச்சையளிக்கவும் பயன்படுகிறது.

பயன்படுத்தும் முறைகள்:

ஆவி பிடித்தல்: இலைகளை நீரில் கொதிக்க வைத்து, அந்த நீரில் ஆவி பிடித்தால் தலைவலி, சளி, சைனஸ் நீங்கும்.

கஷாயம்: இலைகளைக் காய்ச்சி தேனுடன் அருந்தலாம்.

பற்று: இலையை வதக்கி வலியுள்ள இடங்களில் பற்று போடலாம்.

# முதல் பாகத்தின் வசூல் சாதனையை முறியடித்த துரந்தர் 2.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



கடந்த 2025ஆம் ஆண்டு அதிக வசூல் செய்த இந்திய திரைப்படம் என்கிற சாதனையை துரந்தர் படைத்தது. இப்படத்தை இயக்குநர் ஆதித்யா தார் இயக்க, ரன்வீர் சிங் கதாநாயகனாக நடித்திருந்தார்.

மேலும், சாரா அர்ஜுன், சஞ்சய் தத், அக்ஷய் கண்ணா, மாதவன், அர்ஜுன் ராம்பால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். முதல் பாகத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து துரந்தர் 2 திரைப்படத்தை ஆவலுடன் எதிர்பார்த்து ரசிகர்கள் காத்திருந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த துரந்தர் 2 ரசிகர்களிடையே அமோக வரவேற்பை பெற்றது. அதே சமயம் கலவையான விமர்சனங்களை சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 12 நாட்களை பாக்ஸ் ஆபிஸில் கடந்திருக்கும் துரந்தர் 2 திரைப்படம் இதுவரை உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 12 நாட்களில் இப்படம் உலகளவில் ரூ. 1400 கோடி வசூல் செய்துள்ளது. இதன்மூலம், முதல் பாகத்தின் வசூல் சாதனையை, துரந்தர் 2 முறியடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# சினிமா

கவர்ச்சியாக புகைப்படங்களை வெளியிட்டு தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார் திவ்ய பாரதி.

தற்போது அவர் ஹாட் உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# அட நடனப்புயல் பிரபுதேவா மகளா இது, நன்றாக வளர்ந்துவிட்டாரே.... லேட்டஸ்ட் போட்டோ



பிரபுதேவா, இந்திய சினிமா ரசிகர்கள் மைக்கேல் ஜாக்சன் என கொண்டாடப்படும் பிரபலம்.

க்ரூப் டான்ஸராக தனது பயணத்தை தொடங்கியவர் அடுத்து காதலன் படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமானார். அதன்பின் ராசய்யா, லவ் பேர்ட்ஸ், மிஸ்டர் ரோமியோ, மின்சார கனவு, விஐபி, வானத்தை போல என அடுத்தடுத்து நாயகனாக நடித்து வந்தார்.

ஹீரோ ட்ராக்கை தாண்டி இயக்குனர் அவதாரம் எடுத்தவர் போக்கிரி, வில்லு, வெடி, எங்கேயும் காதல் என தொடர்ந்து படங்கள் இயக்கி வந்தார்.

சினிமாவில் நடன இயக்குனர், நடிகர், இயக்குனர் என பன்முகம் காட்டிவரும் பிரபுதேவா இப்போதும் ஆக்டீவாக படங்கள் நடிப்பது, நடனத்தில் அசத்துவது என இருக்கிறார்.

லேட்டஸ்ட்

இவர் ரமலத் என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார், ஆனால் இருவரும் விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர். பின் 2020ம் ஆண்டு ஹிமானி சிங் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இந்த தம்பதிகளுக்கு 2023ம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. தற்போது பிரபுதேவா மற்றும் அவரது மனைவி குழந்தையை நேரில் சென்று பார்த்துள்ளார் பிரபல நடிகை ரம்பா. பிரபுதேவா குழந்தையுடனும் புகைப்படம் எடுத்திருக்கிறார் ரம்பா.

# திருக்கடையூர் மயானம்: எமதர்மன் உயிர் பெற்ற திருமெய்ஞானம்!

திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலுக்குச் செல்பவர்கள் பலரும் அறியாத, ஆனால் மிக முக்கியமான ஒரு தலம் 'திருக்கடையூர் மயானம்'. மார்க்கண்டேயன் கதையின் நிறைவுப் பகுதி இங்கேதான் நிகழ்ந்தது...

பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனை உதைத்துச் சங்காரம் செய்த ஈசன், உலக நியதிப்படி மீண்டும் எமதர்மனுக்கு உயிர் கொடுத்த புனிதமான இடம் இதுவே. அநீதி அழிந்து, நீதி தழைத்த தலம்!

'மயானம்' என்றால் பொதுவான சுடுகாடு அல்ல. மெய்ஞானம் என்பதே மயானமாக மருவியிருக்கிறது

நம்முள் இருக்கும் ஆணவம் அழிந்து, 'மெய்ஞானம்' (உண்மையான அறிவு) பிறக்கும் இடம் என்பதால் இது 'திருமெய்ஞானம்' என்று அழைக்கப்படுகிறது.

சித்தர்கள் மற்றும் ஞானிகள் ரகசியமாகத் தவம் செய்யும் அதிர்வுகள் நிறைந்த தலம்.

பெரிய கோவிலின் பரபரப்பு எதுவுமின்றி, பழமையான வன்னி மரம், அரச மரம் மற்றும் பிரம்மாண்டமான திருக்குளம் சூழ்ந்த ஒரு தியான பூமி.

இங்கு அமர்ந்து ஒரு நிமிடம் தியானம் செய்தாலே மன அழுத்தம் நீங்கிப் பேரமைதி கிட்டும்.



திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட 'தேவாரப் பாடல் பெற்ற தலம்' இது.

சுமார் 1300 ஆண்டுகாலப் பழமை வாய்ந்த வரலாற்றுச் சின்னம்!

"ஆணவம் அழியும் இடத்தில் தான் மெய்ஞானம் பிறக்கும் - அந்த ஞானம் தரும் தலம் திருக்கடையூர் மயானம்!"



## தினம் ஒரு தலைவர்கள்

# சந்திரசேகர ஆசாத் வரலாறு

சந்திரசேகர ஆசாத் 23 சூலை 1906 27 பெப்ரவரி 1931) என அழைக்கப்படும் சந்திரசேகர சீதாராம் திவாரி இந்திய விடுதலை போராட்ட வீரர்களில் ஒருவர். இந்துசுத்தான் குடியரசு அமைப்பு மீளுருவாக்கம், ககோரி ரயில் கொள்ளை, பகத் சிங் போன்றவர்களை வழிநடத்துதல், இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு உருவாக்கம், பிரித்தானிய அதிகாரி சான்டர்சு கொலை போன்றவற்றைச் செய்தவர்.

### வாழ்க்கை வரலாறு


சிறுவயது

ஆசாத் 23 சூலை 1906ல் பண்டிட் சீதாராம் திவாரி மற்றும் ஜக்ரானி தேவி என்ற தம்பதியருக்கு உத்தரப் பிரதேசம் மாநிலத்திலுள்ள பதர்க்கா என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை அலிஜார்பூரில் பணியாற்றிய போது இவர் தன் இளமைப்பருவத்தை மத்திய பிரதேச சபூவா மாவட்டத்தில் கழித்தார். அப்போது அவர் அம்மாவட்ட பில் பழங்குடிகளிடம் முறையாக வில்வித்தை கற்றார். அது அவருக்கு போராட்டக் காலத்தில் உதவியது.

இவரது தாயான தேவி இவரை காசியிலுள்ள வித்யா பீடத்தில் சமசுகிருதம் கற்க அனுப்புமாறு அவருடைய தந்தையிடம் கூறி ஏற்கச் செயதார். இவரது 15ஆவது வயதில் இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்ததற்காகக் கைது செய்யப்பட்டு குற்றவியல் நடுவரிடம் கொண்டு செல்லப்பட்டார். நடுவர் அவரிடம் அவரது பெயர், தந்தைப்பெயர் மற்றும் அவரது முகவரியை அடுத்தடுத்து கேட்க அதற்கு அவர் முறையே விடுதலை (இந்தி - ஆசாத்), சுதந்திரம் மற்றும் சிறை என்று பதிலளித்தார். உடனே நடுவர் அவருக்கு மிகுந்த தண்டனையுடன் கூடிய சிறை செல்லுமாறு உத்தரவிடவே நான் அப்படிக்கூறினால் தான் நீங்கள் என்னைச் சிறைக்கு அனுப்புவீர்கள் என்றுதான் கூறினேன் என்று கூற அந்நடுவரகத்தில் உள்ளவர்கள் அனைவரும் சிரித்து விட்டனர். அதற்கு நடுவர் மிகவும் கோபமடைந்து அவருக்கு 15 பிரம்படி கொடுக்கக் கட்டளையிட ஒவ்வொரு அடிக்கும் அவர் பாரத் மாதா கி ஜெ எனக்கூறினார். அதுவரை சந்திரசேகர சீதாராம் திவாரி என்ற பெயருடன் அறியப்பட்டவர் அதற்குப் பிறகு சந்திரசேகர ஆசாத் என்று அழைக்கப்பட்டார்.

### இளமைப்பருவம்

காந்தி, 1922ல் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்ட பின்னரும் ஆசாத் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். முழுச் சுதந்திரத்தை எந்த வழியினும் அடைய வேண்டும் என்பதற்காக தன்னைத்தானே அர்பணித்துக் கொண்டார். இவரது இளம்வயதில் இவரை பிரன்வேசு சாட்டர்ச்சி என்பவர் இந்துசுத்தான் குடியரசு அமைப்பை ஆரம்பித்த ராம் பிரசாத் பிசுமில் என்றவரிடம் அறிமுகப்படுத்தினார். விளக்குத்தீயில் தன் கையை எரித்துத் தனது தேசபக்தியை வெளிப்படுத்திய பின் பிசுமில் அவரைத் தன் அமைப்பில் சேர்த்துக் கொண்டார். சாதி, மத பணப் பேதமில்லாத அனைவருக்கும் சுதந்திரம் என்ற இந்துசுத்தான் குடியரசு



அமைப்பின் கொள்கை ஆசாத்தை மிகவும் ஈர்த்தது. அதன்பின் அந்த அமைப்பை வளர்ப்பதற்காக பிரித்தானிய அரசாங்க பொருட்களை அவர் கூட்டாளிகளுடம் சேர்ந்து பிசுமிலின் சொந்த ஊரான சாசகான்பூர் வட்டாரத்திலேயேக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தார். அதில் 1925ல் நடந்த ககோரி ரயில் கொள்ளையும் ஒன்று. மேலும் சோசியலிச வழியிலேயே நாளைய இந்தியாவும் இந்திய சுதந்திரமும் இருக்க வேண்டுமென எண்ணினார்.

### ஜான்சி

ஆசாத் ஜான்சியையே தன் அமைப்பின் தலைமைச் செயலகமாக சிறிது காலம் வைத்திருந்தார். ஜான்சியை அடுத்து 15 கிலோமீட்டர் தூரமுள்ள ஆர்ச்சா காடுகளையே தன் அமைப்பின் சண்டைப் பயிற்சிக் கூடமாகப் பயன்படுத்தினார். மேலும் அவரே தன் அமைப்பினருக்குப் போர்பயிற்சிகளைக் கற்றும் கொடுத்தார். ஆர்ச்சா காடுகளுக்குப் பக்கம் சதார் ஆற்றங்கரையிலுள்ள அனுமன் கோயிலில் கூடாரம் அமைத்து அதையே வசிப்பிடமாகப் பயன்படுத்தினார். அப்போது தர்மபுரம் கிராமத்தின் குழந்தைகளுக்குப் போர்ப்பயிற்சி அளிப்பதன் மூலம் அம்மக்களின் நன்மதிப்பை பெற்றார். அக்கிராமத்தின் பெயரான தர்மபுரம் பின் மத்திய பிரதேச அரசாங்கத்தால் ஆசாத்புரம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அவர் ஜான்சியில் வசித்தபோது சதார் சந்தையிலுள்ள பண்டல்கண்ட் மோட்டார் கேரேஜில் வாகனம் ஓட்டும் பயிற்சி பெற்றார். சதாசிவ மல்கபுர்கார், விசுவநாத வைசம்பாயன், பகவன் தாசு மகவுர், ஜான்சி பண்டிட் ரகுநாத் விநாயக் துளேகர், பண்டிட் சீதாராம் பாசுகர் பகவத் போன்றோர் இவரின் அமைப்பில் இணைந்தனர். மேலும் நய் பசுத்தியிலுள்ள ருத்ர நாராயண சிங் மற்றும் நாக்ராவிலுள்ள சீதாராம் பாசுகர் பகவத் வீடுகளிலும் சிறிது காலம் தங்கியிருந்தார்.

பகத்சிங்கும் ஆசாத்தும் இந்துசுத்தான் குடியரசு அமைப்பு 1924ல் ராம் பிரசாத் பிசுமில், யோகேசு சந்தர் சேட்டர்ஜி, சசிந்திரநாத் சன்யால், சசிந்திரநாத் பக்ச்சி போன்றவர்களால் ஒத்துழையாமை இயக்கத்தை அடுத்த 2 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. 1925ல் இவ்வமைப்பால் நடத்தப்பட்ட ககோரி ரயில் கொள்ளையை அடுத்து பிரித்தானிய அரசாங்கம் புரட்சியாளர்களை அழிக்கத் தீவிரப்படுத்தப்பட்டது. பிரசாத், அசஃபகுலா கான், தகூர் ரோசன் சிங், ராசேந்திர நாத் லகரி போன்றவர்கள் இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டதால் அவர்கள் கொல்லப்பட்டனர். ஆசாத், சக்ரவர்த்தி, மற்றும் முராரி சர்மா போன்றவர்கள் பிடிக்கப்பட்டனர். ஆசாத் மீண்டும் இந்துசுத்தான் குடியரசு அமைப்பை மீளுருவாக்கினார். மேலும் ஆசாத்திற்கு பகத் சிங், சுக்தேவ், ராஜ்குரு போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பகவதி சரன் அரோரா என்றவருடன் பழக்கம் இருந்தது. அவர்கள் அனைவரும் இணைந்து இந்துசுத்தான் குடியரசு அமைப்பை இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு என்ற பெயருடன் மறு உருவாக்கம் செய்தனர். அதன்படி சோசியலிச முறையில் இந்தியா விடுதலை அடைவதை அவர்கள் கொள்கையாகக் கொண்டனர்.

### மறைவு

பெப்ரவரி 27, 1931 அன்று அலகாபாத் அல்ஃப்ரட் பூங்காவில் தன் இயக்கத்தவரான சுக்தேவுடன் பேசிக்கொண்டிருந்த போது பிரித்தானிய காவல்துறையினர் சுற்றி வளைத்தனர். சுக்தேவைத் தப்பிக்க விட்டுவிட்டு நீண்ட நேரம் காவல்துறையினரிடம் போராடினார். காலில் குண்டடிபட்டதால் ஆசாத்தால் அங்கிருந்து தப்பிக்க இயலாமல் போனது. தன் துப்பாக்கியில் ஒரு தோட்டா மட்டும் மட்டுமிருக்க காவல்துறையினரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டார். ஆனால் பிரித்தானிய காவல்துறையினர் அவரை என்கவுண்டரில் சுட்டுக் கொன்றதாகவே கூறினர். அவர் பயன்படுத்திய துப்பாக்கி அலகாபாத் அருங்காட்சியகத்திலும் அதன் ஆவணங்கள் லக்னோ சி.ஐ.டி. தலைமையகத்திலும் உள்ளது.

### பிரபலம்

ஆசாத் கொல்லப்பட்ட இடமான அல்ஃப்ரெட் பூங்கா அதன் பிறகு சந்திரசேகர ஆசாத் பூங்கா என்றே அழைக்கப்பட்டது. மேலும் அவரது பெயரில் பள்ளிகள், கல்லூரிகள், வீதிகள் மற்றும் பொதுக்கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

# நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் தேக்கம்: மத்திய அரசு காரணம்-உச்சநீதிமன்றம்

**புதுடெல்லி, ஏப்.3:**

நீதிமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் வழக்கு தொடுத்து, வழக்குகள் தேங்கிக் கிடப்பதற்கு மத்திய அரசு காரணமாக உள்ளது என்று உச்சநீதிமன்றம் புதன்கிழமை சுட்டிக்காட்டியது.

மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையில் (சிஎஸ்ஐஎஃப்) சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றிய காவலா் ஒருவா் பணியில் இருந்து 11 நாள்கள் திடீரென மாயமானதாகவும், மற்றொரு சிஐஎஸ்எஃப் காவலரின் மகள் மும்பையில் இருந்து சத்தீஸ்கரின் ராய்பூருக்கு தப்பி வந்து திருமணம் செய்து கொள்ள, அந்தப் பெண்ணுடன் ரகசியமாக கூட்டுச் சோ்ந்து ஒழுங்கீனமாக செயல்பட்டதாகவும் பணிநீக்கம் செய்யப்பட்டாா்.

இதுதொடா்பான வழக்கை பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயா்நீதிமன்றம் விசாரித்தது. அப்போது சிஐஎஸ்எஃப் காவலா் மாயமானதாக கூறப்பட்ட நாள்களில் அவா் மருத்துவ விடுப்பில் இருந்ததாக வாதிடப்பட்ட நிலையில், மும்பையில் இருந்து தப்பி வந்து அந்தக் காவலரின் தம்பியை மணந்துகொண்ட பெண், தனக்கு எந்தக் குறையும் இல்லை என்று தெரிவித்திருந்தாா். இவற்றைக் கருத்தில் கொண்ட உயா்நீதிமன்றம் சிஐஎஸ்எஃப் காவலரின் பணிநீக்க ஆணையை ரத்து செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதி பி.வி. நாகரத்னா, உஜ்ஜல் புயான் ஆகியோா் அடங்கிய அமா்வு புதன்கிழமை விசாரித்தது. அப்போது நீதிமன்றத்தில் மத்திய அரசே அதிக அளவு வழக்கு தொடுப்பதாகவும், இதன்மூலம் நீதிமன்றத்தில் அதிக அளவு வழக்குகள் தேங்குவதற்கு மத்திய அரசு காரணமாக இருப்பதாகவும் நீதிபதி பி.வி.நாகரத்னா சுட்டிக்காட்டினாா். அவா் கூறுகையில், 'சிஐஎஸ்எஃப் காவலா் வழக்கில் உச்சநீதிமன்றம் ஏன் மேல்முறையீடு செய்துள்ளது என்பது புரியவில்லை. நீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கியிருப்பதாக திரும்ப திரும்ப கூறப்படுகிறது. உண்மையில் நீதிமன்றத்தில் அதிக அளவு வழக்கு தொடுப்பது யாா்?' என்று கேள்வி எழுப்பினாா். இதைத்தொடா்ந்து இந்த மனுவை தாக்கல் செய்ததற்காக மத்திய அரசுக்கு ரூ.25,000 அபராதம் விதித்த உச்சநீதிமன்றம், மனுவை தள்ளுபடி செய்தது.

# புதிய வருமான வரிச் சட்டம் அமலானது: வருமான வரித் துறை

**புதுடெல்லி, ஏப்.3:**




புதிய வருமான வரிச் சட்டம் ஏப்.1 முதல் அமலானது என்று வருமான வரித் துறை அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் : இந்தியாவின் நேரடி வரி செலுத்தும் முறையில் ஒரு மைல்கல் சீர்திருத்தமாக 'வருமான-வரி சட்டம், 2025' அமைந்துள்ளது.

நாட்டின் வருமன-வரி சட்டத்தை நவீனபடுத்தவும் எளிமையாக்கவும் ஒரு பெரும் முயற்சியாக இது அமைந்துள்ளது. 60 ஆண்டுகள் பழமையான வருமான-வரி சட்டம், 1961-க்கு மாற்றாக இது அமைந்துள்ளது.

வரி கொள்கையில் மாற்றமின்றி, ஆனால், பெருந்தெளிவுடனும் எளிமையான மொழியடக்கம், வடிவம் மற்றும் வாசகர் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்தாண்டு, ஆகஸ்ட்டில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று வருமான-வரி சட்டம், 2025-ஆக வடிவம் பெற்றது. வருமான-வரி 2026-இன் விதிகள் அனைத்தும், நேரடி வரிகளுக்கான மத்திய வாரியத்தால் கடந்த மார்ச் 20-இல் குறிப்பிடப்பட்டன. அதில், புதுச் சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதைப் பற்றி குறிப்பிடப்பட்டது.

அது தொடர்பான புதிய படிவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. படிவங்கள் எளிமையாக்கப்பட்டிருப்பதுடன் செயல்முறைகளும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அச்சட்டம் ஏப். 1, 2026 முதல் அமலானதைத் தொடர்ந்து, வருமான-வரி சட்டம், 2025 இந்திய வரி நிர்வாகத்தில் ஒரு புதிய பாகத்தைக் குறிக்கிறது. அத்துடன், அகண்ட பாரதம் முயற்சிக்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகவும் அமைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக டில்லி மாறிவிட்டது:உயர் நீதிமன்றம் கருத்து

**புதுடெல்லி, ஏப்.3:**

தேசிய தலைநகா் குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக மாறிவிட்டது என டில்லி உயா்நீதிமன்றம் புதன்கிழமை கூறியது.

மேலும், இதுபோன்ற சம்பவங்களை எடுத்துரைக்கும் மனுவிற்கு பதிலளிக்குமாறு ரயில்வே, தில்லி காவல் துறை, தில்லி அரசு மற்றும் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆா்) ஆகியவற்றுக்கு உத்தரவிட்டது.

இது தொடா்பாக 'ஜஸ்ட் ரைட்ஸ் ஃபாா் சில்ட்ரன் அலையன்ஸ்' அமைப்பு தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரித்த உயா்நீதிமன்ற நீதிபதி டி.கே. உபாத்யாயா மற்றும் நீதிபதி தேஜஸ் காரியா ஆகியோா் அடங்கிய அமா்வு கூறியதாவது: தில்லி இப்போது குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக மாறிவிட்டது. இது குறித்து நடவடிக்கை எடுக்க அரசுக்கு மனு தேவையில்லை; ரயில் நிலையங்களில் 2 மணிநேரம் செலவழித்தால் போதும்.

குழந்தைக் கடத்தல் குறித்து முந்தைய நீதிமன்ற உத்தரவுகள் இருந்தபோதிலும், இந்த அச்சுறுத்தல் தடையின்றி நடைபெறுகிறது. அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும், பலவீனமான அமலாக்கமே இந்தப் பிரச்னையை உயிா்ப்புடன் வைத்திருக்கிறது என தெரிவித்தனா்.

மனுதாரா் சாா்பில் ஆஜரான வழக்குரைஞா் பிரப்சஹாய் கௌா் கூறுகையில், 2018 முதல் 2024-ஆம் ஆண்டுக்குள் ரயில்வே பாதுகாப்புப் படை, ரயில்வே வளாகங்களில் 84,000-க்கும் மேற்பட்ட குழந்தைகளை மீட்டுள்ளதாகத் தெரிவித்தாா். ஆனந்த்விஹாா் ரயில் நிலையத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறுமி, குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பே கடத்தல்காரா்களிடம் திருப்பி அனுப்பப்பட்டு, பின்னா் மீண்டும் மீட்கப்பட வேண்டியிருந்த ஒரு வழக்கையும் அவா் சுட்டிக்காட்டினாா்.

கடத்தப்பட்ட குழந்தைகளை மீட்பதற்கும் மறுவாழ்வளிப்பதற்கும் ரயில்வே அமைச்சகம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் வெளியிடப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் இருந்தபோதிலும், அதிகாரிகள் இந்த வழிகாட்டுதல்களை மீறுவதால் நீதி தவறுகிறது என்று அந்த மனு சுட்டிக்காட்டியது.

நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும், மீட்கப்பட்ட குழந்தைகள் மீண்டும் கடத்தப்படுவதைத் தடுக்கவும் நீதிமன்றத்தை அது வலியுறுத்தியது.

இதைத்தொடா்ந்து, உரிய நடவடிக்கைக்கான தரவுகளையும் பரிந்துரைகளையும் வழங்குமாறு தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திடம் நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், அடுத்த விசாரணையை ஜூலை 10-ஆம் தேதிக்கு பட்டியலிட்டது.

# ஈரானிடம் இருந்து மீண்டும் கச்சா எண்ணெய் இறக்குமதி? 6 லட்சம் பேரலுடன் குஜராத் வருகிறது கப்பல்



**புதுடெல்லி, ஏப்.3:**

ஈரானிடமிருந்து இந்தியா மீண்டும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் ஏற்றிய கப்பல் குஜராத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

மேற்கு ஆசியாவில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், இந்தியா - ஈரான் இடையிலான கச்சா எண்ணெய் வர்த்தகம் மீண்டும் உயிர் பெறத் தொடங்கியுள்ளது. சுமார் 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெயுடன் ஈரானிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்று நாளை மறுநாள் அதாவது வரும் 4-ம் தேதி குஜராத் துறைமுகத்திற்கு வரவுள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான எண்ணெய் வர்த்தக உறவு தற்காலிகமாகப் புதுப்பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஈரானின் கார்க் தீவிலிருந்து 'பிங் ஷூன்' என்ற கப்பல் குஜராத்தின் வாடினார் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கச்சா எண்ணெயை வாங்குவது யார் என்பது குறித்து அதிகாரப்பூர்வத் தகவல்கள் இல்லை. எனினும், வாடினார் பகுதியில் ரஷ்யாவின் ஆதரவுடன் செயல்படும் நயாரா எனர்ஜி சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும், இங்கிருந்துதான் மத்தியப் பிரதேசத்தின் பினா பகுதியில் உள்ள பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கச்சா எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. சந்தைக் கணிப்பு நிறுவனமான 'கெப்லர்' தரவுகளின்படி, இந்தக் கப்பலின் இறுதி இலக்கு குஜராத் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ஈரான் - அமெரிக்கப் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தித் தட்டுப்பாட்டைப் போக்க, ஏற்கெனவே ஏற்றப்பட்ட சரக்குகளுக்கு மட்டும் அமெரிக்கா ஏப்ரல் 19 வரை 30 நாள் அவகாசம் வழங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இந்தியா இந்த கச்சா எண்ணெயை வாங்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# 'வாக்காளர்களுக்கு அல்வா' முதல் முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி

**திருவனந்தபுரம், ஏப்.3:**

கேரளத்தில் முதல்முறை வாக்காளர்களை கவர அல்வா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல்முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளத்தில் வரும் 9-ம் தேதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் முதல்முறையாக வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்களை கவர அவர்களுக்கு அல்வா வழங்கும் திட்டத்தை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி ரத்தன் யு. கேல்கர் இதற்கான அறிவிப்பை சில தினங்களுக்கு முன்பு வெளியிட்டார். இதன்படி கேரளத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அல்வா பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குச்சாவடியில் வாக்களிக்க வரும் முதல்முறை வாக்காளர்களுக்கு அல்வா பாக்கெட்களை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

முதல்முறை வாக்காளர்கள் யார் என்பதை மாவட்ட தேர்தல் அதிகாரியும்(டிஇஓ), வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளும்(பிஎல்ஓ) கண்டறிந்து இதற்கான பணிகளில் ஈடுபடவுள்ளனர். இதற்காக கூடுதல் தன்னார்வலர்களையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல்முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எதிரான மனு தள்ளுபடி




**புதுடெல்லி, ஏப்.3:**

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எதிராக ஆம் ஆத்மி கட்சியின் மூத்தத் தலைவர் சோம்நாத் பாரதியின் மனைவி லிபிகா மித்ரா டெல்லி நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார்.

அதில், கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, தனது கணவர் குறித்து அவதூறு கருத்துகளை தெரிவித்ததாக கூறியிருந்தார். இந்த வழக்கை கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் பரஸ் தலால் நேற்று விசாரித்தார்.

அப்போது இந்த வழக்கை மேலும் விசாரிக்க முகாந்திரம் எதுவும் இல்லை என்று தெரிவித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# மார்ச் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடி: 9 சதவீதம் அதிகரிப்பு

**புதுடெல்லி, ஏப்.3:**




நாட்டில்கடந்தமார்ச்மாதம் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) ரூ.2 லட்சம் கோடிக்கு மேல் வசூலாகியுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தை (ரூ.1.83 லட்சம் கோடி) ஒப்பிடுகையில் இது 9 சதவீதம் உயர்வாகும்.

அதேசமயம் 2025-26 நிதியாண்டில் ஒரு மாதத்தில் வசூலான மூன்றாவது அதிகபட்சத் தொகையாகவும் இது திகழ்கிறது. முன்னதாக 2025, ஏப்ரல் மாதம் இதுவரை இல்லாத அதிகபட்சமாக ரூ.2.36 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. அதற்கு அடுத்தபடியாக 2025, மே மாதம் ரூ.2.01 லட்சம் கோடி வசூலானது. ஒட்டுமொத்தமாக 2025-26 நிதியாண்டில் ரூ.22.27 லட்சம்கோடிஜிஎஸ்டிவசூலாகி 8.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், '2026, மார்ச் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடியில் உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் 5.9 சதவீதம் அதிகரித்து ரூ.1.46 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது. இறக்குமதி மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ.53,861 கோடி. இது 17.8 சதவீதம் அதிகரிப்பாகும்.

திருப்பியளிக்கப்பட்ட மொத்த தொகை ரூ.22,074 கோடி (13.8சதவீத உயர்வு). மொத்தநிகரஜிஎஸ்டிவருவாய் 8.2 சதவீதம் உயர்ந்து, ரூ.1.78 லட்சம் கோடியாக உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

# மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு ஒத்துழைக்க வேண்டும்: மக்களுக்கு குடியரசு துணைத் தலைவர் வேண்டுகோள்



**புதுடெல்லி, ஏப்.3:**

மக்கள்தொகை கணக்கெடுப்பையொட்டி, குடியரசு துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணனை தில்லியில் உள்ள அவரது மாளிகையில் இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் மற்றும் ஆணையர் மிருத்யுஞ்சய் குமார் நாராயண், இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் அலுவலக துணை தலைமை இயக்குநர் விஸ்வஜித் தாஸ் ஆகியோர் புதன்கிழமை சந்தித்தனர்.

அப்போது, 2027-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான சுய கணக்கெடுப்புப் படிவத்தை இணையவழியில் குடியரசு துணைத் தலைவர் பூர்த்தி செய்தார்.


மத்திய அரசின் "எண்ம இந்தியா' முன்முயற்சியுடன் "2027-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு' மேற்கொள்ளப்படுகிறது. இந்த நடவடிக்கை தரம், செயல்திறன்,தரவுசேகரிப்பில் காலந்தவறாமை, தகவல் பகிர்வில் விரிவான எண்மத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முன்முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தனது சுயகுறிப்பு வழங்கல் விவரம் மற்றும் படத்தை குடியரசு துணைத் தலைவரின் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய அரசின் மக்கள்தொகை கணக்கெடுப்பு முயற்சிக்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; அனைவரும் சுய கணக்கெடுப்பு நடவடிக்கையில் பங்கேற்று, தத்தமது மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தால் அறிவிக்கப்பட்ட காலத்துக்குள் HTTPS://SE.CENSUS.GOV.IN என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் தங்களின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் மற்றும் அதிகாரிகள் சந்தித்து அவரது சுயவிவரக் குறிப்புகளை இணைய வழியில் பதிவு செய்து கொண்டனர்.

# "முதல்வராக தொடர்வேன்" சித்தராமையா திட்டவட்டம்

**பெங்களூரு, ஏப்.3:**



கர்நாடக முதல்வர் பதவியை கைப்பற்ற துணை முதல்வர் டி.கே. சிவகுமார் முயற்சித்து வரும் நிலையில், அம்மாநில முதல்வர் சித்தராமையா தானே அடுத்த 2 ஆண்டுகளுக்கும் முதல்வராக தொடரப் போவதாக தெரிவித்தார்.

கர்நாடக முதல்வராக சித்தராமையா பொறுப்பேற்று வருகிற மே மாதத்துடன் 3 ஆண்டுகள் ஆகிறது. இதனால் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தனக்கு முதல்வர் பதவியை வழங்க வேண்டும் என காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார். அவரது ஆதரவு எம்எல்ஏக்கள் 10-க்கும் மேற்பட்டோர் இதே கோரிக்கையை வலியுறுத்தி போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது குறித்து முதல்வர் சித்தராமையா நேற்று பாகல்கோட்டையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கர்நாடகாவில் முதல்வர் நாற்காலி காலியாக இல்லை. இப்போது அதனை பற்றி பேசுவது தேவையற்றது. முதல்வர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் ஆசைப்படலாம். ஆனால் மக்களின் ஆசீர்வாதம் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் தான் முதல்வராக முடியும். காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவதாக நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். ஊடகங்கள் எதற்காக முதல்வர் விவகாரத்தை பெரிதாக்குகின்றன. ஊடகங்களின் இத்தகைய செயல்பாட்டில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. என்னை பொறுத்தவரை மக்களின் ஆசீர்வாதமும், காங்கிரஸ் மேலிடத்தின் ஆதரவும் எனக்கு இருக்கிறது. எனவே அடுத்த 2 ஆண்டுகளுக்கும் நானே முதல்வராக தொடர்வேன். அதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். இவ்வாறு சித்தராமையா தெரிவித்தார். இந்த கருத்துக்கு டி.கே.சிவகுமாரின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# செல்போன் எண் போல், கணக்கு எண்ணை மாற்றாமல் வங்கியை மாற்றும் வசதி: ரிசர்வ் வங்கி பரிசீலனை

**மும்பை, ஏப்.3:**

செல்போன் எண்ணை மாற்றாமல், செல்போன் இணைப்பை ஒரு நிறுவனத்தில் இருந்து மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றிக்கொள்ளும் வசதி தற்போது நடைமுறையில் இருக்கிறது. இதேபோல், வங்கி கணக்கு எண்ணை மாற்றாமல், ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு மாறிக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்த ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்து வருகிறது.

இது தொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள 2028-ம் ஆண்டுக்கான பேமெண்ட் தொலைநோக்கு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

பேமெண்ட்ஸ் சுவிட்சிங் சர்வீஸ் எனும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதன் வாயிலாக, ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு சேவைகளை மாற்றும்போது உருவாகும் மிகப்பெரிய பிரச்சினைகளை களைய திட்டமிடப்பட்டுள்ளது.

வழக்கமாக ஒரு வங்கி கணக்கைமற்றொருவங்கிக்கு மாற்றும்போது, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சம்பளம், மியூச்சுவல் பண்டு, கடன் தவணை மற்றும் இன்சூரன்ஸ் பிரீமியம் போன்ற அனைத்து விவரங்களையும் புதிய வங்கியில் ஒவ்வொன்றாக மாற்ற வேண்டிய சிரமம் உள்ளது.இந்ததடையைநீக்கி, வாடிக்கையாளர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வாடிக்கையாளர்கள் தங்களுக்கு சிறந்த வட்டி விகிதம் அல்லது மேம்பட்ட டிஜிட்டல் சேவைகளை வழங்கும் வங்கிகளுக்கு எந்தவித தடையுமின்றி மாறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்யும். இதன் வாயிலாக வங்கி துறையில் ஆரோக்கியமான போட்டி உருவாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் ஆபத்தை உணராமல் தண்டவாளத்தை கடக்கும் பயணிகள்

**திருவள்ளூர், ஏப்.03:** கடம்பத்தூர் ரயில் நிலையம் சுரங்கப்பாதை பணியானது கிடப்பில் போடப்பட்டுள்ளதால், ரயில் பயணிகள் ஆபத்தை உணராமல் தண்டவாளத்தை கடந்தும், நுழைந்தும் செல்வதால், விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, அப்பணியை விரைந்து முடிக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை எழுந்துள்ளது. திருவள்ளூர் மற்றும் கடம்பத்தூர் ரயில் நிலையங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் திருவள்ளூர், அரக்கோணம் மற்றும் சென்னை மார்க்கத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். இந்த, ரயில் நிலையம் வழியாக புறநகர் ரயில்கள், விரைவு ரயில்கள், அதிவிரைவு ரயில்கள் சென்று வருகின்றன. ஒவ்வொரு ரயில் செல்லும்போதும் கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் ரயில்வே இருப்புப்பாதை கேட் மூடப்படுவதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்தனர்.Rail Freight

இதனையடுத்து, பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று ரூ.14.5 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 2015ல் துவங்கி 2022ம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வந்தது. இந்த, மேம்பாலம் வழியாக தினமும் புதுமாவிலங்கை, அகரம், சத்தரை, பேரம்பாக்கம், இருளஞ்சேரி, கூவம், குமாரச்சேரி, கீழச்சேரி, மப்பேடு, சிற்றம்பாக்கம், நரசிங்கபுரம், களாம்பாக்கம், போன்ற சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்பவர்கள், மருத்துவமனைக்கு செல்பவர்கள் என தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணித்து வருகின்றனர். இதனால், இந்த கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் பொதுமக்கள் பாதுகாப்பாக செல்ல நடை மேம்பாலத்தை முறையாக அமைத்து தராததால் யாரும் இந்த நடை மேம்பாலத்தை பயன்படுத்துவதில்லை. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரும் ஆபத்தான முறையில் ரயில்வே தண்டவாளத்தை கடந்து செல்கின்றனர்.

எனவே, கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் சுரங்கப்பாதை அமைத்து தரவேண்டும் என பொதுமக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வந்தனர். இந்த, கோரிக்கையை ஏற்று கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் 300 அடி நீளம் 16 அடி அகலம் 9 அடி உயரத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி துவங்கப்பட்டது. 6 மாதத்தில் முடிக்க திட்டமிட்டதாக கூறப்பட்ட இப்பணி, தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால், அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் கடம்பத்தூர் ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகள் ஆபத்தை உணராமல் தண்டவாளத்தை கடந்து செல்லும்போது, ரயில் மோதி உயிரிழந்து வரும் சம்பவமும் தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக, இந்த கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் சரக்கு ரயில்களை அடிக்கடி நிறுத்தி வைப்பதால், ரயில் பயணிகள் மட்டுமின்றி பொதுமக்களும் ஆபத்தை உணராமல் அதில் நுழைந்து செல்லும் போது சிரமப்படுவதோடு ரயில் தண்டவாளத்தை கடக்கும்போது விபத்தில் சிக்கி உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது. எனவே, கடம்பத்தூர் ரயில் நிலையத்தில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணியை உடனடியாக ரயில்வே துறை அதிகாரிகள் முடிக்க வேண்டும் என கோரிக்கை வைத்து வருகின்றனர்.

தண்டவாளத்தை கடக்கும்போது எப்போதெல்லாம் ரயிலில் விபத்தில் சிக்கி உயிர்ச்சேதம் ஏற்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் ரயில்வே சுரங்கப்பாதைக்கான பணிகளுக்கு பூஜை போடுவதும், பின்னர் அந்த பணிகள் கிடப்பில் போடுவதும் தொடர் கதையாகி வருகிறது. ரயில்வே துறை அதிகாரிகள், பொதுமக்களின் உயிர் மீது கரிசனம் காட்டி, கிடப்பில் போடப்பட்ட கடம்பத்தூர் ரயில் நிலைய சுரங்கப்பாதையை உடனடியாக விரைந்து முடிக்க பொதுமக்களும், ரயில் பயணிகளும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சேவா தள பிரிவு, மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் ஆளுக்கொரு பக்கம் சீட் கேட்டு சத்தியமூர்த்திபவன் முற்றுகை: பெண் நிர்வாகி ஒருவர் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு



**சென்னை, ஏப்.03:** மகிளா காங்கிரஸ், சேவாதள பிரிவு நிர்வாகிகள் தங்களுக்கு தேர்தலில் வாய்ப்பு கேட்டு சத்தியமூர்த்திபவன் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பெண் நிர்வாகி ஒருவர் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. தமிழகத்தில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெற இன்னும் ஒரு சில வாரங்களே இருக்கும் நிலையில் தேர்தல் களம் அனல் பறந்து வருகிறது. வேட்பு மனு தாக்கல் முடிவடைய இன்னும் ஒரு சில நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி மட்டும் இன்னும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 28 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலலை வெளியிடவில்லை.

வேட்பாளர்களை இறுதி செய்வதற்காக டெல்லி காங்கிரஸ் மேலிடம் தீவிரம் காட்டி வருகிறது. இதற்காக தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் தலைமையில் மேலிட தலைவர்கள் தொடர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர். மத்திய காங்கிரஸ் தேர்வுக்குழு வேட்பாளர் பட்டியலை இறுதி செய்தது. இந்த பட்டியல் ராகுல்காந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேட்பாளர்கள் தேர்வில் பணம் விளையாடியதாக எழுந்த குற்றச்சாட்டை தொடர்ந்து ராகுல்காந்தி அந்த வேட்பாளர்கள் பட்டியலுக்கு ஒப்புதல் கொடுக்காமல் மீண்டும் புதிய வேட்பாளர் பட்டியலை தயார் செய்ய கூறியதாக தகவல் வெளியானது. இந்த தகவல் தமிழக காங்கிரசார் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், காங்கிரஸ் கட்சியில் உள்ள பிரிவு தலைவர்கள் தங்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் மேலிடத்தை அணுகி வந்தனர். அவர்கள் பெயர் வேட்பாளர்கள் பட்டியலில் புறக்கணிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் கட்சி தலைமை மீது கடும் அதிருப்தியில் இருந்து வந்தனர். இந்த பரபரப்பான சூழ்நிலையில், சேவாதள பிரிவு தலைவர் குங்பூ விஜயனுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும், தமிழக மகிளா காங்கிரஸ் தலைவி ஹசீனா சையத்துக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் கோரி சத்தியமூர்த்திபவனை அவர்களது ஆதரவாளர்கள் நேற்று முற்றுகையிட்டனர். இதனால் காலை முதல் பரபரப்பு எழுந்தது. வேட்பாளர் பட்டியலில் தங்களது தலைவர்கள் பெயர் புறக்கணிக்கப்பட்டதாகவும், தங்களுக்கு ஏதாவது ஒரு தொகுதியில் வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் சத்தியமூர்த்திபவனை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பிராந்திய செய்திகள்

ஒருபுறம் காங்கிரஸ் சேவா தள பிரிவும், மறுபுறம் மகிளா காங்கிரஸ் நிர்வாகிகளும் திரண்டு நின்று போராட்டம் நடத்தினர். அப்போது, திருச்சியை சேர்ந்த லட்சுமி என்ற சேவாதள நிர்வாகி தனது மீது டீசலை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு கூடியது. அங்கிருந்த கட்சியினர் அவரை மடக்கி காப்பாற்றினர்.

இதை தொடர்ந்து, தமிழக காங்கிரஸ் மாநில அமைப்பு செயலாளர் ராம் மோகன், போராட்டம் நடத்தியவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். உங்களது கோரிக்கைகள் அனைத்தும் அகில இந்திய காங்கிரசிடம் தெரிவிக்கப்படும் என்றும், தகுதி வாய்ந்தவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர்களை சமாதானப்படுத்தியதை தொடர்ந்து அவர்கள் கலைந்து சென்றனர். இந்த சம்பவங்களால் சத்தியமூர்த்திபவனில் பதற்றமான நிலை உருவானது. பாதுகாப்பு கருதி போலீசாரும் குவிக்கப்பட்டனர்.

# அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதி ஏற்படுத்த நடவடிக்கை: தமிழக தேர்தல் ஆணையம் விளக்கம்




**சென்னை, ஏப்.03:** தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும், மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க, சாய்தள வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.

மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச் சாவடிகளில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கோரி, மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில், மாற்றுத் திறனாளிகள் சட்ட விதிகளை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக, முழுமையான விவரங்களுடன் மனுவாக தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் தரப்பில், வாக்குச்சாவடிகளில் நிரந்தர சாய்தள வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதனை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகள், வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகும் வகையில் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை மனுவாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# சட்டமன்ற தேர்தலில் ஆசிரியர்கள், காவலர்களை தொடர்ந்து தீயணைப்பு, மின்வாரியம், போக்குவரத்து ஊழியர்களுக்கும் இனி தபால் ஓட்டு

## ஆவணங்கள் பெறும் பணிகள் தீவிரம்

**சென்னை, ஏப்.03:** சட்டமன்ற தேர்தலில் ஆசிரியர்கள், காவலர்களை தொடர்ந்து தீயணைப்பு, மின்வாரியம், போக்குவரத்து துறை ஊழியர்களும் இனி தபால் ஓட்டு போடலாம் என்று தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். சட்டமன்ற தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்கபல்வேறு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. வாக்காளர்கள் இடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசு பணியாளர்கள் அனைவரும் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றுவதை உறுதி செய்யவும் தேர்தல் ஆணையம் ஒரு முக்கிய உத்தரவை பிறப்பித்துள்ளது. அதன்படி போக்குவரத்து மற்றும் மின்வாரியம் உள்ளிட்ட அத்தியாவசிய துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் இந்தமுறை தபால் வாக்கு செலுத்தும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக தேர்தல் பணிகளில் நேரடியாக ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் காவல்துறை உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த வசதி, இந்த முறை மற்ற அத்தியாவசிய துறைகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு கழக போக்குவரத்து டிரைவர்கள், கண்டக்டர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் தபால் ஓட்டு போடலாம். போக்குவரத்து துறையில் உள்ளவர்களுக்கு விண்ணப்பம் வழங்குவதற்காக வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஜெராக்ஸ் பெறப்பட்டு வருகிறது.தேர்தல் செய்திகள்

இதேபோல் மின்விநியோக களப்பணியாளர்கள், சிறைக்காவலர்கள் மற்றும் அதிகாரிகள், அவசரக்கால மீட்புப் பணிகளில் ஈடுபடும் தீயணைப்பு வீரர்கள், அவசர சிகிச்சை மற்றும் ஆம்புலன்ஸ் சேவையில் உள்ள மருத்துவ பணியாளர்களும் இந்த முறை தபால் வாக்குகள் அளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நாளன்று மேற்கண்ட துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் விடுமுறை எடுக்க முடியாமல் பணியில் இருக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால், அவர்கள் தங்கள் சொந்த தொகுதிகளுக்கு சென்று வாக்களிக்க முடியாத நிலை இதுவரை நீடித்து வந்தது.

இதை நீக்கும் வகையில், இவர்களை அத்தியாவசிய பணிப்பிரிவினர் என அங்கீகரித்து தேர்தல் ஆணையம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தபால் வாக்கு பெற விரும்பும் தகுதியுள்ள பணியாளர்கள், அதற்கான பிரத்யேகவிண்ணப்ப படிவத்தை (விண்ணப்பம் 12D) பூர்த்தி செய்து, தங்கள் துறை சார்ந்த நோடல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். பின்னர், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தபால் வாக்கு மையங்களில் குறிப்பிட்ட தேதிகளில் வாக்களிக்க வழிவகை செய்யப்படும். இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளும் பணியாளர்கள், தேர்தல் நாளன்று நேரில் சென்று சாதாரண வாக்குச் சாவடியில் வாக்களிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் ஆணையத்தின் இந்தநடவடிக்கை அரசுப்பணியாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது தேர்தல் நாளில் நூறு சதவீதவாக்களிப்பை உறுதி செய்ய உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே வாக்களிக்க தகுதியான அனைவரும் வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும், ஓட்டு சதவீதத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக தேர்தல் நாளன்று அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை அளிக்கவேண்டும்என்று தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2026 மார்ச் மாதத்தில் 1.01 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்

**சென்னை, ஏப்.03:** *2026 மார்ச் மாதத்தில் 1.01 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது; சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 10,197,604 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக 13.03.2026 அன்று 3,90,306 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.Long Distance Bus & Rail*

*2026, மார்ச் மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 52,90,363 பயணிகள், பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 33,339 பயணிகள், க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 48,73,902 பயணிகள் (Single journey Paper QR /Token 19,19,053; Online QR 1,33,469; Static QR 2,16,210; Whatsapp - 4,72,773; Paytm 3,35,352; ONDC 12,71,008; PhonePe 2,41,012; CMRL Mobile App 71,123; Chennai One App 2,00,717, Event QR 13185 ) பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.*

*சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், Digital SVP, க்யுஆர் குறியீடு (OR Code) பயணச்சீட்டு, Whatsapp - (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்ற பயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20% கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது. மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களில் வாங்கப்படும் ஒற்றைப் பயணத்துக்கான காகித QR பயணச்சீட்டுகளுக்கு (Single Journey Paper QR tickets) இந்தத் தள்ளுபடி கிடையாது. மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.*

*இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# சிவகங்கையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாகனத்தில் தேர்தல் பறக்கும் படை சோதனை!



**சிவகங்கை, ஏப்.03:** *தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த மாதம் 30ம் தேதி தொடங்கியது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அதேவேளை, தேர்தல் ஆணையமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது.*

*இந்நிலையில், சிவகங்கை அருகே அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது, எடப்பாடி பழனிசாமியின் வாகனத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் மறித்து அதில் சோதனை நடத்தினர். சோதனையில் வாகனத்தில் எதுவும் சிக்காத நிலையில் தொடர்ந்து பிரசார பயணம் மேற்கொள்ள பறக்கும் படையினர் அனுமதி அளித்தனர். சிவகங்கையில் 4 தொகுதில் வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி பரப்புரை செய்கிறார்.*

# சென்னை விமானநிலையத்தில் உள்ளூர் விமான கட்டணங்கள் கிடுகிடு உயர்வு: பயணிகள் அதிர்ச்சி

**மீனம்பாக்கம், ஏப்.03:** *மத்திய ஆசிய நாடுகளுக்கு இடையே நிலவி வரும் போர் பதட்டத்தினால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. இதனால் விமான எரிபொருள் கட்டணங்களும் பலமடங்கு அதிகரித்து வருகின்றன. இதைத் தொடர்ந்து, அந்தந்த ஏர்லைன்ஸ் நிறுவனங்கள், பயணிகளின் விமான டிக்கெட் கட்டண உயர்வுக்கு விதித்திருந்த தடையை ஒன்றிய அரசு தளர்த்தியுள்ளது. இதையடுத்து, சென்னை உள்பட இந்தியாவின் பல்வேறு நகரங்களில் உள்ளூர் விமானக் கட்டணங்கள் இன்று முதல் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. குறிப்பாக, அமெரிக்கா-ஈரான்-இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே போர் துவங்குவதற்கு முன்னதாக இருந்த கட்டணங்களைவிட, ஏப்ரல் 1ம் தேதியான இன்று முதல் அனைத்து விமானக் கட்டணங்களும் கிடுகிடுவென உயர்ந்துள்ளன.*

*சென்னை விமானநிலையத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் தூத்துக்குடிக்கு செல்ல குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.3,608. அதுவே, இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.6,503 ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரியில் சென்னையில் இருந்து மதுரை செல்ல, குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.3,129. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.5,467. இதேபோல் சென்னையில் இருந்து திருச்சிக்கு ஜனவரி மாத குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.3,608. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.4,521. சென்னையில் இருந்து கோவைக்கு கடந்த ஜனவரி மாத குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.4,351. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.4,966.*

*இதேபோல் சென்னையில் இருந்து டெல்லிக்கு ஜனவரி மாத குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.5,933. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.6,496. மேலும், சென்னையில் இருந்து மும்பைக்கு ஜனவரி மாத குறைந்தபட்ச விமான கட்டணம் ரூ.3,356. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.4,020.*

*இதுதவிர, சென்னையில் இருந்து கொல்கத்தாவுக்கு ஜனவரி மாத குறைந்தபட்ச கட்டணம் ரூ.5,293. இன்று முதல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.6,047. எனினும், தமிழ்நாட்டுக்குள் இயக்கப்படும் உள்ளூர் விமானங்களில் மட்டும் இந்த கட்டண உயர்வுகள் மிக அதிகமாகவும், சென்னையில் இருந்து பிற மாநிலங்களுக்கு இயக்கப்படும் உள்ளூர் விமானங்களுக்கு ஓரளவு குறைவாக கட்டண உயர்வுகள் உள்ளன.*



*இதுகுறித்து ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் தரப்பினர் கூறுகையில், தமிழ்நாட்டுக்குள் இயக்கப்படும் சில விமானங்களில் குறைந்த எண்ணிக்கை பயணிகளுடன் இயக்கப்படுவதால் ஏற்படும் இழப்புகளை சமாளிக்க, இதுபோன்று ஓரளவு விமான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு உள்ளன. எனினும், சென்னையில் இருந்து வெளிமாநிலங்களுக்கு இயக்கப்படும் உள்ளூர் விமானங்களில் அதிகமான பேர் பயணிப்பதால், சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவனங்களுக்கு அதிகளவு இழப்பு ஏற்படுவதில்லை. அதனால் அதன் கட்டணங்கள் பெருமளவு உயர்த்தப்படவில்லை என்கின்றனர். Long Distance Bus & Rail*

*சென்னை உள்பட பல்வேறு விமான நிலையங்களில் இன்று முதல் கூடுதல் விமான கட்டண உயர்வுகள் அமலுக்கு வந்துள்ளது. இதனால், ஏற்கெனவே பழைய கட்டணங்களில் டிக்கெட் முன்பதிவு செய்துள்ள பயணிகள், அவர்கள் போர்டிங் பாஸ் வாங்குவதற்கு முன் கூடுதல் கட்டணத் தொகைகளை, ஆன்லைன் மூலமாக செலுத்துவற்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். இதனால் இன்று சென்னை விமான நிலையத்தில் உள்ளூர் விமானங்களில் செல்ல வேண்டிய ஏராளமான பயணிகள் கூடுதல் விமான கட்டண உயர்வால் பெரிதும் அவதிப்பட்டனர்.*

*மேலும், கோடை விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் விமானங்களில் சுற்றுலா தலங்களுக்கு சென்று வரலாம் என்று திட்டமிட்டிந்த நடுத்தர வர்க்க குடும்பத்தினருக்கு, இந்த விமான கட்டண உயர்வு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*


# ஊட்டி தாவரவியல் பூங்கா கண்ணாடி மாளிகையில் செவ்வந்தி மலர் அலங்காரம்: சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பு



**ஊட்டி, ஏப்.03:** ஊட்டி தாவரவியல் பூங்கா கண்ணாடி மாளிகையில் மம்ஸ் என்று அழைக்கப்படும் "கிரிசாந்தமம்" (செவ்வந்தி) மலர்கள் கொண்டு புதிய மலர் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர். நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இவர்களில் 90 சதவீதம் பேர் ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவுக்கு செல்கின்றனர். சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வகையில் பூங்காவில் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அதில், மலர்கள் பூத்துக் குலுங்கும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வழக்கம். இந்நிலையில், கோடை சீசனுக்காக தற்போது பூங்காவை தயார் செய்யும் பணி நடந்து வருகிறது. பூங்கா முழுவதிலும் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அதனை பராமரித்து வருகின்றனர். அதேபோல் 35 ஆயிரம் தொட்டிகளில் மலர்செடிகள் நடவுசெய்யப்பட்டுநாள்தோறும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பூங்கா மலர்களின்றி காட்சி அளிக்கிறது.

இந்நிலையில் பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடையாமல் இருக்க பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் தொட்டிகளில் மலர்கள் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது. பால்சம், பிகோனியோ, சைக்ளோமென் போன்ற மலர் தொட்டிகளை கொண்டு மலர் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக ''கிரிசாந்தமம்'' என்று அழைக்கப்படும் செவ்வந்தி மலர்கள் மலர் தொட்டிகளை கொண்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. குளிர்ச்சியான காலநிலையில் இந்த செடிகள் செழித்து வளர கூடியது. தற்போது பல வண்ணங்களில் இந்த மலர்கள் பூத்து காணப்படுகிறது. கண்ணாடி மாளிகை முழுவதும் இந்த மலர் செடிகளை கொண்டு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த மலர்கள் பார்ப்பதற்கு அழக்காக உள்ளது. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது மட்டுமின்றி புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர்.

# பின்னலாடை தயாரிப்புக்கான நூல் விலை கிலோவுக்கு ரூ.12 உயர்வு - தொழில் துறையினர் அதிர்ச்சி



**சென்னை, ஏப்.03:** பின்னலாடை தயாரிப்புக்கான நூல் விலை 2 நாளில் கிலோவுக்கு ரூ.12 உயர்ந்துள்ளது.திருப்பூரில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் அதனை சார்ந்த ஜாப் ஒர்க் நிறுவனங்கள் செயல்படுகின்றன. பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. தொழில்துறையினர் தங்களுக்கு ஆர்டர்கள் கிடைத்தவுடன், அதற்கேற்ப நூல்களை மொத்தமாக கொள்முதல் செய்து ஆடைகளை தயாரித்து வருவது வழக்கம். நூல் விலை மற்றும் மூலப்பொருட்களின் விலையை கருத்தில் கொண்டு ஆடைகளின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

இதில் கடந்த மாதம் அனைத்து வகையான நூல்களுக்கும் கிலோவிற்கு 7 ரூபாய் உயர்த்தி அறிவிப்பை வெளியிட்டது. பஞ்சு பற்றாக்குறை காரணமாகவும் இறக்குமதியாகும் பஞ்சின் மீது வரி விதிப்பு காரணமாகவும் இந்த விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் இதற்கு ஒன்றிய அரசு தீர்வுகாண வேண்டும் எனவும் தொழிற் துறையினர் தெரிவித்திருந்தனர்.இந்த நிலையில் நடப்பு மாதத்திற்கான (ஏப்ரல்) நூல் விலையை நூற்பாலைகள் அறிவித்துள்ளது. அதன்படி நேற்று முன்தினம் கிலோவுக்கு ரூ.10ம், நேற்று ரூ.2ம் என மொத்தம் கிலோவுக்கு ரூ.12 உயர்த்தி நூற்பாலைகள் அறிவித்துள்ளது.

இதன்படி 10ம் நம்பர் கோம்டு நூல் ரூ.209, 16-ம் நம்பர் ரூ.219, 20-ம் நம்பர் கோம்டு நூல் ரூ.277, 24-ம் நம்பர் ரூ.287, 30-ம் நம்பர் ரூ.297, 34-ம் நம்பர் ரூ.317, 40-ம் நம்பர் ரூ.337, 20-ம் நம்பர் செமி கோம்டு ரூ.272, 24-ம் நம்பர் ரூ. 280, 30-ம் நம்பர் ரூ.293, 34-ம் நம்பர் ரூ. 306, 40-ம் நம்பர் ரூ.325க்கும் விற்பனை செய்யப்படுவதாக நூற்பாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# ஏப்.6 முதல் டிடிவி தினகரன் பிரசாரம்

**சென்னை, ஏப்.03:** சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் அமமுக வேட்பாளர்களை ஆதரித்து ஏப். 6ம் தேதி முதல் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

ஏப். 6ம் தேதி சைதாப்பேட்டைதொகுதியில் பிரசாரத்தை தொடங்கும் டிடிவி. தினகரன், ஏப்ரல்7ல் பூந்தமல்லி, ஏப்ரல்8ல் திருப்பத்தூர் உள்ளிட்ட தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டு ஏப்ரல்18ம் தேதி மடத்துக்குளத்தில்பிரசாரத்தை நிறைவு செய்கிறார்.

# தமிழகத்தில் ஏப்ரல் 7 வரை மழை பெய்ய வாய்ப்பு




**சென்னை, ஏப்.03:** தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இருந்து வட கர்நாடகாவின் உள்பகுதி வரை சுமார் 900 மீட்டர் உயரத்தில், காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (ஏப்.2) முதல் 4-ம் தேதி வரை தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். 4-ம் தேதி தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

5, 6-ம் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 7-ம் தேதி தென் தமிழகம், வடக்கு கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும். வட தமிழகத்தின் உள்பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 79 டிகிரி முதல் 95 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று வெப்பநிலை வழக்கம்போல இருக்கும். 3, 4, 5-ம் தேதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். சென்னை வானிலை ஆய்வு மைய செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எழும்பூரில் இருந்து ஏப்.5-ம் தேதி முதல் வழக்கம் போல் ரயில்கள் இயங்கும்



**சென்னை, ஏப்.03:** எழும்பூர் ரயில் நிலையத்தில் மேம்பால அடித்தளப் பணி முடிவடைந்துள்ளதால், ஏப்.5-ம் தேதி முதல் 10, 11-வது நடைமேடைகளில் வழக்கம்போல புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் ரூ.735 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, பிரம்மாண்ட நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதற்கு அடித்தளம் அமைக்கும் பணி காரணமாக, 10, 11-வது நடைமேடைகள் மூடப்பட்டன. இதனால், கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு தடத்தில் கடந்த பிப்.19-ம் தேதி முதல் 44 மின்சார ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன. 10, 11-க்கு பதிலாக, 5, 6-வது நடைமேடைகளில் புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

வழக்கமான ரயில் சேவை குறைக்கப்பட்டு, தற்காலிக கால அட்டவணைப்படி, 20 நிமிடங்களுக்கு ஒரு மின்சார ரயில் இயக்கப்படுகிறது. இது மட்டுமின்றி, இரு மார்க்கத்திலும் எழும்பூர் நோக்கிச் செல்லும்போது ரயில்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன. இதுமட்டுமின்றி, எழும்பூர், சென்ட்ரலுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் விரைவு ரயில்களை தவறவிடும் நிலையும் ஏற்படுகிறது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், எழும்பூர் ரயில் நிலையத்தின் 10, 11-வது நடைமேடைகளில் இருந்து வழக்கமான புறநகர் மின்சார ரயில் சேவை ஏப்.5-ம் தேதி முதல் தொடங்கும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது:

எழும்பூர் ரயில் நிலையத்தில் 10, 11-வது நடைமேடைகளில் நடை மேம்பால அடித்தளப் பணி முடிந்துள்ளது. எனவே, ஏப்.5-ம் தேதி முதல், 10, 11-ம் நடைமேடைகளில் மின்சார ரயில் சேவை மீண்டும் இயங்க தொடங்கும். நடை மேம்பாலம், நகரும் படிக்கட்டு, குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. நிழற்குடைகள் பின்னர் அமைக்கப்படும். இதற்கான பணிகள் இரவில் நடைபெறும். சாய்வு பாலம் அடுத்த 15 நாட்களில் அமைக்கப்பட்டுவிடும். பழைய அட்டவணைப்படி மின்சார ரயில் சேவை இயங்கத் தொடங்கும். இதனால், நெரிசல், தாமதமின்றி மக்கள் பயணிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தொழிலாளர்களுக்கு ஏப்.23-ம் தேதி சம்பளத்துடன் பொது விடுமுறை அளிக்க உத்தரவு




**சென்னை, ஏப்.03:** தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளதால், அன்றைய தினம் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கேரளம் மற்றும் புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி அன்றும், தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதியும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி, தேர்தல் நடைபெறும் நாளன்று, தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து வகை தொழிலாளர்களும் (தினக்கூலி, தொகுப்பூதியம், வாரந்திர ஊதியம், ஒப்பந்த ஊதியம் மற்றும் மாத ஊதியம்) வாக்களிக்கும் வகையில் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, கேரளம் மற்றும் புதுச்சேரியில் நடைபெறும் தேர்தல்களுக்கு ஏப்ரல் 9-ம் தேதி அன்று அவ்வூரைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி அன்று நடைபெறும் தேர்தலுக்கு அனைத்து தொழிற்சாலை நிறுவனங்களும் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் தேர்தல் நாளன்று வாக்களிப்பது அவசியம் என்பதையும் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

தேர்தல் நாளில் தொழிலாளர்களுக்கு பொது விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள் பற்றிய தகவல்களை மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசியில் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அரசியல் கார்னர்

# வாஜ்பாயுடன் இருந்த கருணாநிதி, முரசொலி மாறன் சங்கிகளா? - சிவகங்கை கூட்டத்தில் ஸ்டாலினுக்கு பழனிசாமி கேள்வி



**சென்னை, ஏப்.03:** முன்னாள் பிரதமர் வாஜ்பாய் காலத்தில் பாஜகவுடன் திமுக கூட்டணி அமைத்ததே, வாஜ்பாயுடன் இருந்த கருணாநிதி, முரசொலி மாறன் சங்கிகள் என்று முதல்வர் ஸ்டாலின் ஒப்புக் கொள்கிறாரா? என சிவகங்கை பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

சிவகங்கையில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று பிரச்சாரம் செய்தார். சிவகங்கை தொகுதி அதிமுக வேட்பாளர் பி.ஆர். செந்தில்நாதன், காரைக்குடி அமமுக வேட்பாளர் தேர்போகி பாண்டி மற்றும் திருப்பத்தூர், மானாமதுரையில் போட்டியிடும் பாஜகவை ஆதரித்து பழனிசாமி பேசியதாவது:

பழனிசாமி கையில் ரத்த கறை படிந்துள்ளதாக ஸ்டாலின் கூறுகிறார். கடந்த 5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் 18,000 குழந்தைகள் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். திமுக ஆட்சியில் குழந்தைகள், பெண்கள், மூதாட்டிகளுக்கு பாதுகாப்பு இல்லை. அதிமுகவில் சட்டத்தின் ஆட்சி நடந்தது; திமுக ஆட்சியில் சட்டம் சந்தி சிரிக்கிறது. சிவகங்கை மாவட்டத்தில் கஞ்சா, போதை ஆசாமிகள் சாலையில் நின்று கொண்டிருந்தோரை கொடூரமாக வெட்டியுள்ளனர். கோயில் காவலாளி அஜித்குமார் மீது பொய்யாக திருட்டு வழக்கு பதியப்பட்டு, விசாரணை என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மானாமதுரையில் இளைஞர் ஆகாஷ், போலீஸாரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதுதான் ரத்த கறை படிந்த கை. ஸ்டாலின் பொம்மை முதல்வர் என்பதால் சரியாக ஆட்சி நடத்த முடியவில்லை.

பாஜகவுடன் அதிமுக கூட்டணி வைத்திருப்பதால், பழனிசாமி முழு சங்கியாக மாறிவிட்டதாக முதல்வர் கூறுகிறார். வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் பாஜகவுடன் திமுக கூட்டணி அமைத்ததே. அப்படியென்றால், வாஜ்பாயுடன் இருந்த கருணாநிதி, முரசொலி மாறன் என்ன சங்கிகளா? அவர்களை சங்கிகள் என்று ஸ்டாலினே ஒப்புக்கொள்கிறாரா? காங்கிரஸ் - திமுக கூட்டணியில் பிரச்சினை எழுந்தபோது கனிமொழி டெல்லிக்கு சென்று பேசினார். அதை என்னவென்று சொல்வது? தோல்வி பயத்தால் காங்கிரஸ் காலை பிடித்து கெஞ்சி கூத்தாடி கூட்டணி வைத்துள்ளீர்கள்.

உதயநிதி சென்னையில் பல கோடி ரூபாய் செலவழித்து கார் பந்தயம் நடத்தினார். அவர்கள் செல்வச் செழிப்பாக இருப்பதால் பணத்தின் அருமை தெரியவில்லை. தந்தை, மகன் ஊதாரித்தனமாக மக்கள் வரிப் பணத்தை செலவழிக்கின்றனர்.

பழநி கோயில் பணத்தில் ரூ.162 கோடியில் 11 திட்டங்களுக்கு ஒப்பந்தம் விட்டனர். அதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. திட்டங்களுக்கு அரசு பணத்தை செலவழிக்காமல், எதற்கு பக்தர்கள் பணத்தை எடுக்கிறீர்கள். நான் தெய்வ பக்தி உடையவன்; தெய்வமே திமுக ஆட்சியை கேள்வி கேட்கும். யாருக்கும் தெரியாமல் கோயில் நகைகளை உருக்கிவிட்டனர். எவ்வளவு உருக்கினர்; எவ்வளவு திருடினர் என்று தெரியவில்லை.

கடந்த 2021-ல் அதிமுக தான் முதலில் தேர்தல் அறிக்கை வெளியிட்டது. அதில் நாங்கள் மகளிருக்கு ரூ.1,500 வழங்குவோம் என்றோம். ஆனால் நீங்கள் ரூ.1,000 வழங்குவதாக கூறினீர்கள். இந்த முறையும் நாங்கள் தான் முதலில் வாக்குறுதி அளித்தோம். நாங்கள் காப்பி அடிக்கவில்லை; எங்களது அறிவிப்பை தான் அவர்கள் காப்பி அடித்துள்ளனர். இவ்வாறு அவர் பேசினார்.

# அரூர் கேட்டால் திமுக அரக்கோணம் கொடுத்தது; பல்லாவரம் கேட்டால் பண்ருட்டி கிடைத்தது - திருமாவளவன் ஆதங்கம்



**சென்னை, ஏப்.03:** விசிக சிட்டிங் எம்எல்ஏக்கள் எஸ்.எஸ்.பாலாஜி, ஆளூர் ஷாநவாஸ், பனையூர் பாபு ஆகியோருக்கு மீண்டும் சீட் வழங்காதது குறித்து அவர்களை விசிக தலைமை ஒதுக்கிவிட்டதாக கடந்த சில நாட்களாக பல்வேறு தகவல்கள் வெளியாயின.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து திருமாவளவன் கூறியதாவது: கடந்த முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர்களை நான் மிகவும் நேசிக்கிறேன். 4 சட்டமன்ற உறுப்பினர்களும் சிறப்பாகப் பணியாற்றினர். நன்றாகப் பணியாற்றியவர்களுக்கு ஏன் இந்த முறை சீட் வழங்கவில்லை என்ற கேள்வி எழுவது இயல்புதான். ஆனால் இதில் எந்த உள்நோக்கமும் இல்லை. ஒரு முறை கூட சீட் தரவில்லை என்று எத்தனையோ நபர்கள் உள்ளனர்.

நாகை மீண்டும் கிடைத்திருந்தால் ஆளூர் ஷாநவாஸுக்கே தந்திருப்பேன். நாகையில் போட்டியிட்ட ஷாநவாஸ் விரும்பவில்லை என்று கூறினார்கள். அந்தத் தொகுதி ஜவாஹிருல்லாவுக்கு சென்றுவிட்டது. ஆளூர் ஷாநவாஸ் ராயபுரத்தில் போட்டியிட விருப்பம் தெரிவித்தார். அவருக்காக நான் சீட் கேட்டேன். அதற்குப் பிறகு பல்லாவரம் வேண்டும் என்று கேட்டார். ஆனால் அது தேமுதிகவிற்கு சென்றுவிட்டது. எங்களுக்கு பண்ருட்டி கொடுத்தார்கள்.

அரூர் தொகுதி கேட்டு பலமுறை போராடினோம். ஆனால் அரக்கோணம் தான் திமுக கொடுத்தது. அவசர கதியில் தொகுதிகள் முடிவு செய்யப்பட்டன. மேலும் காலம் குறைவாக இருந்ததால் விரைவில் முடிவு செய்ய முதல்வர் வலியுறுத்தினார். இதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.ஷாநவாஸ் கூடாது, அவரைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எடுக்கப்பட்ட முடிவு இல்லை. இதில் எந்த உள்நோக்கமும் இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.

இது குறித்து ஆளூர் ஷாநவாஸ் வெளியிட்ட அறிக்கையில், " ஒரு கட்சியில் யாருக்கு எப்போது எப்படி வாய்ப்பளிக்க வேண்டும் என்பது அந்தக் கட்சியின் தலைமை எடுக்கும் முடிவாகும். அம்முடிவு எதுவாயினும் அதை ஏற்றுக் கொள்வதே சிறந்த அறமாகும்." என கூறியுள்ளார்.

மேலும் அவரிடம் பேசும்போது, "பொது தொகுதியான நாகையில் விசிகவுக்கு நிறைய எதிர்ப்பு இருந்தது, பல நெருக்கடிகளுக்கு பின்பு தான் வெற்றி பெற முடிந்தது. விசிகவின் கூட்டங்களில் நான் பங்கேற்பது இல்லை என வரும் செய்திகள் தவறானவை. மீண்டும் வாய்ப்பு வரும் என நம்பிக்கை இருந்தது, ஆனால் வாய்ப்பு கிடைக்காதது வருத்தமில்லை" என்றார். இதேபோல எஸ்.எஸ்.பாலாஜியும் வாய்ப்பு கிடைக்காதது மனக்குறையாகவோ, தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக கருதவில்லை என தெரிவித்தார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM